விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 309 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 07 செவ்வாய்க்கிழமை (24.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## அமைச்சரவையில் அதிரடி மாற்றம்

# சுகாதார அமைச்சுப் பதவி கெஹலியவிடமிருந்து பறிப்பு

- 3 அமைச்சுக்களை மாற்றியமைத்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.
- சுகாதார அமைச்சரானார் ரமேஷ் பத்திரன.
- சுற்றாடல் அமைச்சு கெஹலியவிடம் கையளிப்பு.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேற்று முற்பகல் புதிய அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இதுவரை இல்லாத அளவுக்கு மோசமான சுகாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதால் கெஹலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அவருக்கு சுற்றாடல் அமைச்சு வழங்கப்பட்டுள்ளது.

விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சராக மகிந்த அமரவீரவும் சுற்றாடல் அமைச்சராக கெஹலிய ரம்புக்வெலவும் 15

## பணவீக்கம் வீழ்ச்சி

(கொழும்பு)

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான பணவீக்கம் கடந்த செப்ரெம்பர் மாதத்தில் 0.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள புதுப்பிக்கப் 15

## வெவ்வேறு வீதி விபத்து

### ஐவர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் இரு இளைஞர்கள் உட்பட 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

கட்டுநாயக்க பொலிஸ் பிரிவுக்குட் 15

## அமைச்சர்களை மாற்றி பிரச்சினைகள் மூடிமறைப்பு

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் அமைச்சர்களை மாற்றிப் பிரச்சினைகளை மூடி மறைக்க முற்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் 15

## பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

### அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா



(கொழும்பு)

பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பலாலி சர்வதேச விமான நிலையத்தில் தற்போதுள்ள பயணிகள் முனையத்தை விரிவுபடுத்துதல், டியூட்டி பிரியை ஸ்தாபித்தல், 15

## பாரத பிரதமர் மோடிக்கான உத்தியோகபூர்வ வரைவு பூர்த்தி

### நேரில் சந்திக்க நேரம் ஒதுக்குமாறு தமிழ்த் தரப்பால் கோரப்படவுள்ளது

(கொழும்பு)

பாரத பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்குமாறு கோரும் கடிதம் மற்றும் வடக்கு, கிழக்கில் காணப்படுகின்ற சமகால நிலைமைகளை மையப்படுத்திய இராஜதந்திரிகளுக்கான கடிதம் ஆகியன இறுதியாகியுள்ளதாக தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளரும் யாழ். 15

### காசாவில் 320 இடங்களில்

## இஸ்ரேல் படைகள் வான்வழித் தாக்குதல்

(காசா)

ஹமாஸ் மற்றும் பலஸ்தீன ஜிகாத் அமைப்புகளின் கட்டமைப்புகளை குறிவைத்து காசாவில் 320 இடங்களில் இஸ்ரேல் வான்வழி தாக்குதலை நடத்தியுள்ளது.

17ஆவது நாளாக இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கு இடையேயான மோதல் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. 15

### பட்ஜெட்டைத் தொடர்ந்து

## பாராளுமன்றம் கலைக்கப்படலாம்?

(கொழும்பு)

பாராளுமன்றத்தை கலைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்பட்டதை தொடர்ந்து, குறித்த நடவடிக்கை முன் 15

## அமைச்சரவையை மாற்றி புதிய நாடகம் அரங்கேற்றம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அமைச்சரவையை மாற்றி ஜனாதிபதி ரணில் தலைமையில் அரசு புதிய நாடகம் ஒன்றை அரங்கேற்றியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.

அமைச்சரவை மாற்றம் தொடர்பில் எதிர்க்கட்சி தலைவரால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமதுவேடிக்கைத் 16



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் அழைப்பு



## மார்க்கண்டு பகீரதன் (கீதன்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 23.10.2023 திங்கட்கிழமை அன்று கீரிமலையில் இடம்பெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் 25.10.2023 புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் இடம்பெறவுள்ளது. அத்தருணம் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(17561)

பிறப்பு
28.10.1979

இறப்பு
25.09.2023

தகவல் :
குடும்பத்தினர்
வத்திராயன் வடக்கு,
தாழையடி.
077 544 1925


# அதிபர் சேவை தரம் - III வடக்கில் 399 பேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை அதிபர் சேவைக்கான தரம்-III போட்டிப் பரீட்சையில் வடகாணத்தில் 399 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனங்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி கொழும்பில் வைத்து வழங்கப்படவுள்ளது. (ம-7)

# போதையில் சாரத்தியம் கைது செய்யும் பொலிஸாருக்கு 5000 ரூபாய் கொடுப்பனவு

மதுபோதையில் வாகனம் ஓட்டுபவர்களை கைது செய்யும் ஒவ்வொரு பொலிஸாருக்கும் 5,000 ரூபாவை வழங்கும் முன்னோடி திட்டத்தை செயல்படுத்த போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்பு பிரிவு அறிவித்துள்ளது.

இந்த திட்டம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி வரை செயற்படுத்தப்படும். இந்தக் காலகட்டத்தில், மது போதையில் வாகனம் செலுத்தும் ஒருவரைகைதுசெய்யும் பொலிஸ உத்தியோகத்தருக்கு அவரது சம்பளத்தில் 5.000 ரூபா கூடுதல் கொடுப்பனவாகவும் வழங்கப்படும். என போக்குவரத்து கட்டுப்பாடு மற் றும் வீதி பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம-7)


## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. moneytransfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7460)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470



# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் அருந்தவச்செல்வி அன்னலிங்கம்

தோற்றம்
1959.03.28

திதி : தசமி

மறைவு
2022.11.03

ஆண்டுகள் ஒன்று ஆகிவிட்டது
ஆறவில்லை எங்களின் துயரம்
ஆறாத துயரை நாங்கள் அனுபவிக்க
நீங்கள் மீளாத்துயில் கொண்டீர்கள்

எங்கள் குடும்பத்தின் ஆணிவேரே
கண்மூடி முழிக்க முன்னே காற்றாய் கரைந்து போனீர்களே
எங்களின் ஆலமரம் சாய்ந்தது அதன் – நிழலில்
நின்ற உறவுகள் எல்லாம் தவித்துக் கொண்டிருக்கிறது

நீங்கள் மறைந்த நாள் முதலாய் – எங்களுக்கு
நிம்மதியும் இல்லை நிற்கதியாய் நிற்கிறோம்
உங்களின் ஆயுள் கணக்கை மாற்றிப் போட்டிருக்கலாம்
இறைவனும் மனமிரங்க மறுத்து விட்டானே

இவ்வாழ்க்கை இவ்வுலகில் போதுமென விண்ணுலகில்
வாழ்ந்திட நீங்கள் எமைப் பிரிந்து சென்றீர்களோ
தங்களின் ஆத்மா சாந்தி பெற்று
சிவனடி சேர வேண்டுமென மனநிறைய
வேண்டி வணங்குகிறோம்.

குழுதெணி
அல்வாய் வடமத்தி, அல்வாய். (17566)

தங்களின் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்



# கரைச்சி பிரதேச சபை - கிளிநொச்சி கேள்வி அறிவித்தல் - 2024 திருத்தம்

**2023.10.22** ம் திகதிய வலம்புரி பத்திரிகையில் 10ம் பக்கத்தில் பிரசுரமான **“கேள்வி அறிவித்தல்- 2024 கரைச்சி பிரதேச சபை கிளிநொச்சி”** என்ற விளம்பர அறிவித்தலில் 1வது பந்தியில் குத்தகைக்கு வழங்குவதற்கான காலப்பகுதி 2024.01.01 - 2023.12.31 என குறிப்பிடப்பட்டிருந்ததற்கு பதிலாக 2024.01.01 - 2024.12.31 வரையான காலப்பகுதியென மாற்றப்பட்டுள்ளது.


செயலாளர்,
கரைச்சி பிரதேச சபை,
கிளிநொச்சி.

(C-7480)



# பத்தாவது ஆண்டிலே பெருமையுடன் அஞ்சலிக்கின்றோம்!

மலர்வு
11
.
01
.
1946



உதிர்வு
14
.
10
.
2013

## அமரர் இளையதம்பி செல்வராஜா

( ஓய்வு நிலை அதிபர், ஆங்கில ஆசான்/
யாழ்/மாவட்ட சிற்றூர்திச் சங்க செயலாளர்/ கணக்காளர் )

திதி : ஐப்பசி மாத வளர்பிறை தசமி

எத்தனை கருமங்களை நாணாற்றி நிற்கையில்
ஏற்புடன் என்னருகில் துணைவரும் என்பதியே!
வித்தகராய் நாம்திகழ கல்வியின் விளை நிலமாய்
வித்திட்டு விளைச்சலை தந்துநின்ற அப்பாவே!
உத்தமராய் உயர்ந்திட சமத்துவக் கொள்கையில்
உடன்பட்டு எங்களை வளர்த்திட்ட தாத்தாவே!
பத்தாண்டுப் பிரிவினில் ஆசிரியப் பண்புகளை
பலர்சொல்ல கேட்டின்றும் பெருமையுடன் அஞ்சலிக்கிறோம்!

“சிவ இல்லம்”
ஆழக்கிணற்றடி (தெணி)
பொலிகண்டி.

(C-7479)

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கட்டுநாயக்காவில் விபத்து இருவர் பலி

(கொழும்பு)

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிவந்த அதிசொகுசு பேருந்துடன் முச்சக்கர வண்டியொன்று மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

கட்டுநாயக்கா பகுதியிலேயே நேற்று முன்தினம் இரவு இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் இவ்விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6)

### மண்மேடு சரிந்ததில் மாணவன் பலி

(மாத்தறை)

மாத்தறை - கொலொன்ன தடயம் கந்த பிரதேசத்தில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்தில் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

வீட்டின் மீது நேற்று முன்தினம் இரவு மண்மேடு சரிந்து விழுந்ததில் தொரபனே பாடசாலையில் கல்வி பயிலும் 17 வயது மாணவரே உயிரிழந்ததாக தெரியவந்துள்ளது.(நி-5-6)

# சீரற்ற காலநிலையால் வேகமெடுக்கும் நோய்கள்

## சுகாதார திணைக்களம் எச்சரிக்கை



**(கொழும்பு)**

**நிலவும் மழையுடனான காலநிலையால், நாட்டின் பல பகுதிகளிலும் தற்போது மூன்று வகையான தொற்று நோய்கள் பரவி வருவதாக சுகாதார திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.**

கண் நோய், வயிற்றுப்போக்கு, சுவாசக்கோளாறுகளுடன் கூடிய காய்ச்சல் போன்றவை பதிவாகி வருவதாக சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர்.

இவ்வாறான நிலைமைகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மக்கள் தமது சுகாதாரப் பழக்க வழக்கங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை பொதுசுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவிக்கையில்,

"இம்மூன்று நோய்களையும் கட்டுப்படுத்த தனிமனித சுத்தம் மிகவும் அவசியமானது. மேலும், தற்போது ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமை தணிந்து வருவதால், பல பகுதிகளில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் பாரியளவிலான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், அந்த அனர்த்தத்தை தடுக்க பொதுமக்கள் பூரண ஆதரவை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மக்கள் அதிக கவனம் எடுக்காவிட்டால் எதிர்காலத்தில் ஏராளமான உயிர்கள் பறிபோகும்" என அவர் எச்சரிகை விடுத்தார். (நி-5-6)

# மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மின் கட்டணத்தை அவ்வப்போது அதிகரிக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து தலவாக்கலை மற்றும் கினிகத்தேன நகரங்களில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பதாகைகளை ஏந்தியவாறும் அரசாங்கத்திற்கு எதிராக கோசங்களை எழுப்பியவாறும்பெருந்தோட்ட தொழிலாளர்கள் உட்பட பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

### மசகு எண்ணெய் விலையில் வீழ்ச்சி

(வோஷிங்டன்)

ஹமாஸ் தரப்பினருக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான மோதலை அடுத்து சர்வதேச சந்தையில் அதிகரித்திருந்த மசகு எண்ணெயின் விலை சற்று வீழ்ச்சியை பதிவு செய்து வருகின்றது.

இதன்படி, மசகு எண்ணெயின் விலை நேற்றைய தினம் வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.


உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 87.72 அமெரிக்க டொலராக வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 91.78 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

இதேவேளை, உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 2.89 அமெரிக்க டொலராக நிலவுகிறது. (நி-5-6)


1 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 1990 – 11 – 09



மறைவு 2022 – 11 – 05

சிவபாலன்–சிவரூபன் (றூபன்)

ஓராண்டு நகர்ந்தாலும் நம்மை விட்டு அகலாது உன் நினைவு...
நினைவுகள் வருகையில் நிலைகுலைந்து போகின்றோமடா
உன்னை நினைக்காத நொடிகளில்லையடா

அன்னாரின் ஆத்மா இறைபதம் சரணடைய பிரார்த்திப்போமாக
ஓம் சாந்தி சாந்தி சாந்தி
அன்னாரின் முதலாம் ஆண்டு சிரார்த்த தின நிகழ்வு
25.10.2023 நாளை புதன்கிழமை பகல் 11.30 மணியளவில்
அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால்
தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகை தந்து
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்
தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து
கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வீரபத்திரர் கோவிலடி,
உடுப்பிட்டி.
077 123 6319.


(சி–7477)

தகவல்
குடும்பத்தினர்.



இரண்டாவது ஆண்டு நினைவு

பிறப்பு 10 • 08 • 2004



இறப்பு 30 • 10 • 2021

அமரர்.

செல்வி. வர்சிகா ரஞ்சன் சர்மா

பொட்டு வைத்த வண்ண நிலவொன்று
எமை விட்டுச் சென்றதேனோ?
கொட்டிக்கொட்டி அன்பைத் தந்த பூவொன்று
வாடி நிலத்தில் வீழ்ந்ததேனோ?
பட்டுப்பாதம் புல் நோகா பனித்துளியொன்று
பாதை மறந்து போனதேனோ?
சிட்டுக்குருவியாய் சிறகடித்த சிலையொன்று
எம் நெஞ்சை கல்லாக்கிச் சென்றதேனோ?
நித்தம் நித்தம் உன் நினைவில் தவிக்கின்றோம்
நீ இல்லாத இடம் தேடி நடக்கின்றோம்
நெஞ்சில் உன்னை நிலைநிறுத்தி நினைக்கின்றோம்
நீயில்லா வாழ்வதனை வெறுக்கின்றோம்.

4 ஆம் வட்டாரம்,
முள்ளியவளை.

(17562)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி பிரதேச சபை

01.01.2024 முதல் 31.12.2024 வரை மரக்கறிச் சந்தைகள், மீன்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் - 2024

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் :- 24.10.2023 செவ்வாய்க்கிழமை தொடக்கம் 08.11.2023 வரை
அலுவலக நாட்களில் மு.ப 09.00 பி.ப 3.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் காலம் :- 09.11.2023 மு.ப 10.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் காலம் :- 09.11.2023 மு.ப 10.30 மணி

| இல. | கேள்வி கோரப்படும் இடங்கள் | மாத வாடகை | 2024 இற்கான ஆண்டு கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் (மீள் அளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| கச்சாய் உப அலுவலகம் | | | | | |
| 1 | கொடிகாமம் மத்திய மரக்கறிச் சந்தை | - | 14,500,000.00 | 150,000.00 | 1,000.00 |
| 2 | கொடிகாமம் சந்தை வண்டி வாகன தரிப்பு நிலையம். | - | 50,000.00 | 5,000.00 | 1,000.00 |
| 3 | கொடிகாமம் மீன் சந்தை | - | 1,875,000.00 | 100,000.00 | 1,000.00 |
| 4 | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 950,000.00 | 100,000.00 | 1,000.00 |
| 5 | கொடிகாமம் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1,500.00 | 1,019,000.00 | 100,000.00 | 1,000.00 |
| 6 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல 01 | 750.00 | 132,000.00 | 10,000.00 | 1,000.00 |
| 7 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல 02 | 750.00 | 108,000.00 | 10,000.00 | 1,000.00 |
| 8 | களஞ்சிய அறை இல - 01 | 1,000.00 | 27,000.00 | 5,000.00 | 1,000.00 |
| 9 | களஞ்சிய அறை இல - 02 | 1,000.00 | 26,000.00 | 5,000.00 | 1,000.00 |
| 10 | கொடிகாமம் மத்திய பஸ்தரிப்பிட மலசலகூடம் மற்றும் வண்டி வாகன தரிப்பு நிலையம். | - | 25,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 11 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் . இல - 01 | - | 18,000.00 | 5,000.00 | 1,000.00 |
| 12 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் இல - 02 | - | 22,000.00 | 5,000.00 | 1,000.00 |
| 13 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் இல - 03 | - | 26,000.00 | 5,000.00 | 1,000.00 |
| வரணி உப அலுவலகம் | | | | | |
| 14 | வரணி பொதுச்சந்தை | - | 55,000.00 | 5,000.00 | 1,000.00 |
| 15 | வரணி இயற்றாலை பொதுச்சந்தை | - | 29,000.00 | 5,000.00 | 1,000.00 |
| 16 | வரணி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 347,000.00 | 10,000.00 | 1,000.00 |
| 17 | வரணி கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 95,000.00 | 10,000.00 | 1,000.00 |
| 18 | வரணி இயற்றாலை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 38,500.00 | 5,000.00 | 1,000.00 |
| கைதடி உப அலுவலகம் | | | | | |
| 19 | கைதடி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 183,000.00 | 10,000.00 | 1,000.00 |
| 20 | கைதடி கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 214,000.00 | 10,000.00 | 1,000.00 |
| 21 | கைதடி பொதுச்சந்தை | | 88,000.00 | 10,000.00 | 1,000.00 |
| மிருசுவில் உப அலுவலகம் | | | | | |
| 22 | மிருசுவில் மாட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 618,000.00 | 100,000.00 | 1,000.00 |
| 23 | மிருசுவில் கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 82,000.00 | 10,000.00 | 1,000.00 |
| 24 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 43,000.00 | 5,000.00 | 1,000.00 |
| 25 | மிருசுவில் பொதுச்சந்தை | | 6,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 26 | மிருசுவில் வடக்கு பொதுச்சந்தை | | 50,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 27 | எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | | 110,000.00 | 10,000.00 | 1,000.00 |
| நாவற்குழி உப அலுவலகம் | | | | | |
| 28 | நாவற்குழி பொதுச்சந்தை | | 27,000.00 | 1,000.00 | 1,000.00 |

**நியந்தனைகள்:-**

1. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம், அதன் நிழற்படப்பிரதியினையும் கொண்டு வருதல் வேண்டும்.
2. கேள்வி கோர விரும்புவோர் கேள்வி வைப்புப் பணம், படிவக் கட்டணம் என்பவற்றை செலுத்துதல் வேண்டும். (வரி நீங்கலாக)
3. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு ஒரு பிரதியினை "செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை, A9 வீதி, கொடிகாமம். என்ற விலாசத்திற்கும், மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம். என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
4. 09.11.2023 ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் மாத்திரம் சமூகமளிக்கலாம்.
5. அறைகள் மற்றும் கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் இயைபுடைய மாத வாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
6. வண்டி, வாகன தரிப்பு நிலையங்களுக்கான கட்டணமாக பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணத்திற்கு மேலதிக கட்டணம் அறவிட முடியாது. (துவிச்சக்கர வண்டிக்கு ரூ.10.00 மோட்டார் சைக்கிளுக்கு ரூபா.20.00 முச்சக்கரவண்டிக்கு ரூபா.30.00 இலகுரக வாகனங்களுக்கு ரூபா.50.00 கனரக வாகனங்களுக்கு ரூபா.100.00)
7. சந்தைகளில் வியாபாரிகளால் கொள்வனவு செய்யப்படும் எந்தவொரு விவசாய உற்பத்தி பொருட்களுக்கு எவ்விதமான கழிவுகளும் வழங்கும் நடைமுறை அனுமதிக்கப்படமாட்டாது.
8. உள்ளூராட்சி மன்றங்களில் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் பெறுவதற்கான உரித்து இல்லை.
9. கேள்விகளை தகுந்த காரணங்களுடன் ஏற்றுக் கொள்வதற்கும், முழுமையாகவோ அல்லது பகுதியளவாகவோ நிராகரிப்பதற்குமான முழு அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.
10. மேலதிக விபரங்கள், விளக்கங்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**சாவகச்சேரி பிரதேச சபை.** (C-7481) திகதி: 24.10.2023

## மரண அறிவித்தல்



பிறப்பு 18 . 03 . 1941 — இறப்பு 23 . 10 . 2023

### திருமதி ஞானாம்பிகை சிவபாதம்

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, சிங்கப்பூரை வாழ்விடமாகவும் சயன்ஸ் சென்ரர் வீதி கரவெட்டி வடக்கு கரவெட்டியை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஞானாம்பிகை சிவபாதம் அவர்கள் *23.10.2023* அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் கந்தப்பு சிவபாதம் (பொறியியல் விரிவுரையாளர், School of Agriculture கண்டி, Regional/ District Training Center, Karadiyanaru) அவர்களின் அன்பு மனைவியும் வீ.சிதம்பரப்பிள்ளை(VC வாத்தியார்) - பார்வதி(மயிலவாசா, கரவெட்டி) தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை கந்தப்பு(இலங்கை வங்கி முகாமையாளர்) - பாக்கியம் தம்பதிகளின் மருமகளும் வாகீசன், வசுமதி ஆகியோரின் தாயாரும் கணேந்திரன், நிர்மலாவின் மாமியும் Dr.ஷருதி(அரச. சட்ட வைத்திய அதிகாரி), சிவசங்கரன் சச்சிதானந்தன் (Airbus UK/Elisbeth moire), Dr.ஷிவாணி (சிங்கப்பூர்), பவானி(வெஸ்டன் அவுஸ்திரேலியா பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாட்டியும் வேதாந்தத்தின் பூட்டியும் அமரர் பாலசுந்தரம்(IBM USA), வள்ளியம்மை, சிவக்கொழுந்து ஆகியோரின் சகோதரியும், அமரர் சுப்பிரமணியம்(Post Master HPO Colombo), காலஞ்சென்றவர்களான Dr.கதிரவேற்பிள்ளை (மந்திகை), கமலாசினி, கமலநாதன்(Trade Commisioner SL Mission Malasiya & India), மற்றும் ராணி ஆகியோரின் மைத்துனியும் வேதநாயகி, சிதம்பரராஜன் ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் 25 ஆம் திகதி அக்டோபர் மாதம் மதியம் 12.30 மணிக்கு ஈமச்சடங்குகள் நடைபெற்று பின்னர் 2.30 மணியளவில் அன்னாரின் "கன்கொல்லைப்பதி, இல.26 கன்பொல்லை வீதி, நெல்லியடி இல்லத்திலிருந்து பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு சோனப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

*தகவல் :*
பிள்ளைகள்
**+94 77 739 7353** (C-7483)

## மரண அறிவித்தல்



மண்ணில் 1941 . 12 . 06 — விண்ணில் 2023 . 10 . 23

### திருமதி அரியமலர் மனோகரன்

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை புலோலி மேற்கு, கிராமக் கோட்டடியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி அரியமலர் மனோகரன் அவர்கள் 23.10.2023 திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - மகேஸ்வரி தம்பதியினரின் மூத்த புதல்வியும் அமரர் முருகேசு மனோகரனின் அன்பு மனைவியும் ஆனந்த கதிரமலை, ஆனந்த குமாரதாஸ், ஆனந்த பாமதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமிர்தமணி, மனோன்மணி, சுந்தரராஜன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் முருகதாஸ், சுமதி, தயானந்தன்(பெறாமகன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மப்பிரியா, கிருபாரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஹரிஸின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*தகவல் :* குடும்பத்தினர்
மகன் முருகதாஸ்
மகள் சுமதி
பெறாமகன் தயானந்தன்
**077 344 3034**

'கதிரமலை வாசம்'
புலோலி கிழக்கு,
கிராமக்கோடு. (C-7482)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவ தளபாட விநியோகத்திற்காக இலங்கையை பயன்படுத்த சீனா முயற்சி

(வோஷிங்டன்)

இலங்கையை இராணுவ தளபாட விநியோகத்திற்காக பயன்படுத்துவது குறித்து சீனா ஆராய்ந்துள்ளது என பென்டகன் தெரிவித்துள்ளது.

சீனா தனது உலகளாவிய இராணுவ தளங்களை விஸ்த ரிக்க முயற்சிக்கின்றது. தனது இராணுவ தளபாட விநியோ கத்திற்காக 18 நாடுகள் குறித்து சீனா கவனம் செலுத்தியுள்ளது எனவும் பென்டகன் குறிப்பிட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கைகளிற்கான தேவை எழும்போது, சீனா இராணுவம் பயன்படுத்தக்கூடிய தளங்களை உருவாக்கு வது குறித்தே கவனம் செலுத்துகின்றது.

சீனா இராணுவ தளபாட விநியோகத்திற்கான தளங்களை ஏற்படுத்துவது குறித்து ஆராயும் நாடுகளில் நான்கு நாடுகள் இந்தியாவின் நெருங்கிய அயல்நாடுகளாகும். பங்களாதேஷ், இலங்கை, மியன்மார், பாக்கிஸ்தான் ஆகிய நாடுகளே இவை என பென்டகன் தெரிவித்துள்ளது.

ஏனைய மூன்று நாடுகளும் தென்கிழக்காசிய நாடுகள், தாய்லாந்து, சிங்கப்பூர், இந்தோனேசியா என 2023 இல் சீனாவில் இராணுவம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ற அமெரிக்காவின் காங்கிரஸிற்கான அமெரிக்காவின் பாதுகாப்பு வருடாந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

தொலைதூரங்களில் தனது இராணுவ வலிமையை வெளிப்படுத்துவதற்கு உதவும் விதத்தில் சீனா தனது வெளிநாட்டு உட்கட்டமைப்பு மற்றும் விநியோக வசதிகளை விஸ்தரிக்க முயல்கின்றது.

சீனாவின் இந்த நடவடிக்கைகள் அமெரிக்காவின் இரா ணுவ நடவடிக்கைகளை குழப்பலாம் எனவும் குறிப்பிட் டுள்ளது. (நி-5-6)

## 3 மாதங்களுக்கு ஒரு முறை மின் கட்டண திருத்தம்?

(கொழும்பு)



இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் அமைச்சரவை பத்திரம் ஒன்று அடுத்த வாரம் அமைச்சர வையில் தாக்கல் செய்யப்படும் என மின்சக்தி மற்றும் வலு சக்தி அமைச்சர் காஞ்சன விஜே சேகர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத் தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்துத் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் புதிய மின்சாரத்துறை சட்ட மூலம் இந்த ஆண்டு இறுதிக்குள் பாராளுமன்றில் முன்வைக்கப்படும்.

இதேவேளை 6 மாதங்களுக்கு ஒருமுறை இடம்பெறும் மின்கட்டண திருத்தத்தை 3 மாதங்களுக்கு ஒரு முறை திருத்துவதற்கான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருவதாகவும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5-6)


## ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாச நாதர் சாரதா நவராத்திரி தச சண்டீஹோமம் தரிசித்து “மறுவில் ஞான மடைவார்”



மூலத்தின் ஒன்றான முன்னைப் பழம் பொருளே!
நவராத் திரியனாங்கே! நற்சிந் தனைச்சிவதி!
அபிராமி உன்றன் அழகு விழிகளிலே!
ஆவிகரை வாரை அலையிருத்தும் அம்பிகையே!
சிவதி புராணம்

விசயதசமி விழா-உயிர்கள் மல நீக்கம்
மடைந்து வீடுபேறும் திருவருட் சத்திய
தேவியை வழிபடும் புண்ணிய நாள்

நாயேனையும் இங்கு ஒரு பொருளாக நயந்து வந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய் நின்னை உள்ள வண்ணம்
பேயேன் அறியும் அறிவு தந்தாய் என்னபேறுபெற்றேன்
தாயே மலைமகளே செங்கண்மால் திருத்தங்கச்சியே
அபிராமி அந்தாதி-௭௦

மும்மலங்களுஞ் சேர்ந்த இருள் வடிவமே மகிடாசுரன் ஆகும். அவனால் வருத்தப்பட்ட தேவர்கள் நல்ல உயிர்களாகும். தேவர்கள் உமையம்மையாரைக் குறித்துத் தியானத்திலிருந்து அவ்வுயிர்கள் எல்லாப் பற்றையும் நீக்கி விடுதற் பொருட்டுப் பரம்பொருளைப் பற்றி கடவுள் வழிபாடு ஆகும். அம்மையார் துர்க்கையாகி மகிடனைக் கொன்றது உயிர்கள் திருவருளினால் மல நீக்கமடைதலாகும். விசயதசமி விழா மல நீக்கமடைந்து உயிர்கள் வீடுபேறடையும் பொருட்டாகும்.

மகிடாசுரன் தவஞ்செய்து, மூன்று உலகங்களையும் ஆட்சி செய்யும் பேற்றையும் அழியாத வலிமையையும் பிரமதேவரிடம் பெற்றான். பொன்னுலகத்தவர்களாகியவர்களுக்கு துன்பங்கள் செய்தான். ஆற்றாத தேவர்கள் பெருதும் வருந்தி, அவனுக்கு பெண்ணினால் மரணமென்றும், பிரமதேவரின் வரத்தை எண்ணி தேவியின் பாதங்களை நெஞ்சில் நிறுத்திச் சிந்தித்து நவராத்திரி ஒன்பது நாள் இரவு வழிபட்டுருக்க வழிபட்டவர்களிடத்து (தேவர்கள்) ஒவ்வொருநாளுஞ் சிறிது சிறிதாக ஒளிதோன்றி ஒன்பதாவது நாளாகிய நவமியில் புதியதோர் பேரொளி கூடி துர்க்கை அம்பாள் வடிவமாகி தேவர்களுக்கு அஞ்சாதீர்கள், என அபயங்கூறி, சிற்பமைந்த பத்தாம் நாளாகிய தசமியில், போருக்குப் பொருந்திய படைகளைத் தாங்கிச் சென்று கார்மேகம் போன்ற மகிடாசுரனைக் கொன்று, அம்மையின் சூலத்தால் தாக்குண்டு வீழ்த்தி, அவன் தலையை அம்மையார் சக்கரத்தால் அறுத்து, அதன் மீது தமது திருவடிகளை மிதித்து வெற்றியை நாட்டினார். விண்ணவரும் மண்ணவரும் தேவியின் திருவருளை வியந்து பலவாறு துதித்தனர்.

விசயதசமி விழா மலநீக்கமடைந்த உயிர்கள் வீடுபேறடைவதாகும். எல்லாத் தவத்திலும் ஐம்புலப் பகைவரை வெல்லுதற்குத் துணைசெய்து நிற்கும் அந்தந்த ஆலய அம்பாளுக்கு எட்டுநாளும் கும்பபூசை செய்து ஒன்பதாவது நாளாகிய நவமியில் திருமுழுக்காட்டிடுவர். அது முடிந்து பத்தாவது நாளாகிய தசமியில் மாநோன்புத் திருவிழாவும் செய்வர். மாநோன்பு என்பது நாளடைவில் மருவி மானம்பு ஆயிற்று என முன்னோர் கூறுவர். ஓம் பராசக்தி.

வலிமை மிக்க மகிடாசுரனை அழித்த
விசயதசமி நாளான இன்று
அபிராமி அந்தாதி, தேவிபாராயணமும்
திருமுறைகளையும் எந்நாளும் ஓதியும்
மறுவில் ஞானமடைவோம்.
“ஓம் நமசிவாய”



க.கு.க.சிவபாலன்,
மாணிக்கவாசகர் மடலாயபோசகர்,
காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்.

(C-7476)


## இராசிபலன்

24.10.2023
ஐப்பசி 07, செவ்வாய்க்கிழமை
தசமி பிற்பகல் 1.10 மணிவரை
அவிட்டம் பிற்பகல் 2.07 மணிவரை

சுபநேரம் 10.32-12.02 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
சந்திராஷ்டமம் -பூசம், ஆயில்யம்

கேதார கௌரி விரதாரம்பம்
விஜயதசமி

வளவன்


மேஷம்

இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், போசன சுகமுண்டு.


கடகம்

நேசித்த ஒருவருடன் யோசித்து பேசும் சூழ்நிலை ஏற்படலாம், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வேலைச்சுமை கூடும்.


துலாம்

பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், வளர்ச்சி கூடும் நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.


மகரம்

பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


ரிஷபம்

சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.


சிம்மம்

குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும் நாள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.


விருச்சிகம்

வழிபாட்டில் ஆர்வம் கூடும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நண்பர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.


கும்பம்

சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், விருப்பங்கள் நிறைவேற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், போசன சுகமுண்டு.


மிதுனம்

தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பகை விலகி பாசம் கூடும் நாள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.


கன்னி

இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.


தனுசு

நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவர்.


மீனம்

எப்படி நடக்குமேவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

நல்ல நகைச்சுவை எல்லாவற்றையும் தாங்கும்படி செய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரிக்கும் குடும்ப வன்முறைகள்

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தில் வருடத்தில் சுமார் நானூறுக்கும் மேற்பட்ட குடும்ப வன்முறைகள் பதிவாகி வருவதாக மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.**

கிளிநொச்சி மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை மற்றும் பொருளாதார நெருக்கடி, தொழில் வாய்ப்பின்மை என்பன அதிகளவான குடும்ப வன்முறைகளுக்கு காரணங்களாக கண்டறியப்பட்டிருக்கின்றன.

கடந்த வாரம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழுக்கூட்டத்தில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-315)



அடிப்படை உட்கட்டுமான வசதிகள் அற்ற நிலையில் இயங்கிவரும் கிளி/மலையாளபுரம் திருவள்ளுவர் ஆரம்பப் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட குடிநீர்க் கிணறும் அதனுடன் இணைந்த குடிநீர் வழங்கல் கட்டமைப்பும் நேற்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் மாணவர்களின் பயன்பாட்டுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. (படம்:-சப்தசங்கரி)

## வாணிவிழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இந்து மாமன்றம் முன்னெடுக்கும் வாணிவிழா இன்று செவ்வாய் முற்பகல் 10.30 மணிக்கு கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியும் சைவ மகாசபையின் பொதுச் செயலாளருமாகிய மருத்துவர் பரா.நந்தகுமாரும் சிறப்பு விருந்தினராக கல்விக் காருண்யன் ஈ.எஸ்.பி.நாகரத்தினமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வாணிவிழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு மற்றும் கலைநிகழ்வுகள் என்பன இடம்பெற உள்ளன. (நி-5-6-33)

(யாழ்ப்பாணம்)

யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தின் நவராத்திரி விழா இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் கிட்டிணன் சிறீகாந்தராசா தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் கரவெட்டி பிரதேச மருத்துவமனை மருத்துவ அதிகாரி வைத்திய கலாநிதி. திருமதி.சூரிகா சத்தியரூபன் கலந்து கொள்ளவுள்ளார். (நி-5-6)

## மானம்பூ உற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கரியபுலம் அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவப் பெருமான் ஆலயத்தில் இன்று காலை 9 மணிக்கு அரசடி திருவருள் மிகு சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயத்திற்கு எழுந்தருளி வந்து ஆலய முன்றலில் மானம்பூ உற்சவம் இடம்பெறவுள்ளது. (நி-5-6)

## திருட்டு நகைகளுடன் இருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கச்சாய் வீதிப் பகுதியைச் சேர்ந்த இருவர் திருட்டு நகைகளுடன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருட்டு நகைகளை அடகு வைக்க முற்பட்ட வேளையில் மேற்படி சந்தேக நபர்கள் பெண் ஒருவர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-30)

## நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நவமகாஜன சிற்பி தெ.து.ஜயரத்தினத்தின் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை அதிபர் வே.சந்திரசேகர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வலி.வடக்கு பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ கலந்து கொள்ளவுள்ளார். (நி-5-6)

# வடக்கிற்கான பேருந்து சேவையை வழங்க போக்குவரத்து அமைச்சு தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திற்கு போதிய பேருந்துகளை வழங்குவதோடு, போதிய நடத்துநர்கள் மற்றும் சாரதிகளை நியமிக்குமாறு, தன்னால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் பயணிகள் போக்குவரத்து சேவையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக, வடமாகாணத்தில் அமைந்துள்ள டிப்போக்களுக்கு போதிய பேருந்துகளை வழங்குவதோடு, போதிய நடத்துநர்கள் மற்றும் சாரதிகளை நியமிக்குமாறு போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடம் கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பித்திருந்தேன்.

அதன்பிரகாரம் அமைச்சின் செயலாளரினால், மேற்குறித்த விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இலங்கை போக்குவரத்து சபையின் தலைவருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார். (நி-5-6-33)



உலக மயக்க மருந்தியல் தினத்தினை முன்னிட்டு யாழ்.போதனா மருத்துவமனை மயக்க மருந்தியல் பிரிவின் ஏற்பாட்டில் போதனாவில் மயக்க மருந்தியல் நிபுணர்களால் முதலுதவி பயிற்சி நேற்று நயினாதீவு பொது சந்தை பகுதியில் இடம்பெற்றது. (படம்:-சிவசாந்தன்)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை மேற்கு, மால்கொல்லை ஞான வைரவர் ஆலய பாலாலைய கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் 9.30 மணி வரையிலான சுபவேளையில் இடம்பெறவுள்ளது. (நி-5-6-33)


SINNATHURAI CHILDREN FOUNDATION සින්නත්තුරෛ ළමා පදනම சின்னத்துரை குழந்தைகள் நிறுவனம்

**திருக்குறள் பாவோதல் போட்டி - 2023**

சின்னத்துரை குழந்தைகள் நிறுவனம் மற்றும் பனுவல் புக்மார்ட் (Book Mart), வலம்புரி ஊடக அனுசரணையுடன் நடாத்தும் பதினான்கு (14) வயதிற்கு உட்பட்ட மாணவர்களிற்கான திருக்குறள் பாவோதல் போட்டி

மதிப்பிற்குரிய அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் கற்கை நலன்விரும்பிகள் அனைவருக்கும்

மேற்படி போட்டியில் அனைவரும் ஆர்வத்துடன் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களின் பிரதேச அடிப்படையில் விண்ணப்பதாரிகளின் தொகையை அடிப்படையாகக் கொண்டு இடம், காலம், நேரம் முதலானவை வலம்புரி ஊடகம் மூலம் அறிவிக்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 01.12.2023 ஆகும்.

வயதெல்லை 7 - 8 வரை : அன்புடைமை, புலால் மறுத்தல் ஆகிய அதிகாரங்களில் இருந்து 05 குறள்கள்.
வயதெல்லை 9 - 10 வரை : விருந்தோம்பல், இனியவை கூறல், கொல்லாமை ஆகிய அதிகாரங்களில் இருந்து 06 குறள்கள்.
வயதெல்லை 11 - 12 வரை : செய் நன்றி அறிதல், அடக்கமுடைமை, பயனில சொல்லாமை, ஈகை ஆகிய அதிகாரங்களில் இருந்து 08 குறள்கள்.
வயதெல்லை 13 - 14 வரை : கல்வி, வாய்மை, மானம், பெரியாரைப் பிழையாமை, பண்புடைமை ஆகிய அதிகாரங்களில் இருந்து 10 குறள்கள்.

குறிப்பு : குறளும் பொருளும் சொல்லும் அழகு, மேடை ஆளுமை, நிலை, உச்சரிப்பு, சீர் உடை அனைத்தும் கவனத்திற்கொண்டு நடுவர்களால் புள்ளி வழங்கப்பட்டு திறமை மிக்கவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களிற்கு பெறுமதி மிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் வெற்றிக்கிண்ணங்களும் வழங்கி கௌரவிக்கப்படுவார்கள்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி- சி.காண்டீபன் (செயலாளர் - SCF), பனுவல் புக் மாட்(Book Mart), இல.12, யாழ் இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் அல்லது scfthirukkural@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

1. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.
2. முகவரி, தொடர்பு இலக்கம், மின்னஞ்சல்
3. பாடசாலையின் பெயர், கல்வி கற்கும் தரம்.
4. பெற்றோர் அல்லது பாதுகாவலர் கையொப்பம்.

தொடர்புகளுக்கு 0767427596

தகவல் நிர்வாகம் SCF நிறுவனம், பனுவல் Book Mart

ஊடக அனுசரணை "வலம்புரி"

நிர்வாகப் பொறுப்பாளர் SCF தலைவர் - சி.துரைராஜா பதிவு எண் GA3126


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பறிக்கப்பட்ட கெஹெலியவின் அமைச்சுப் பதவி

## மகிழ்ச்சியில் கம்மன்பில எம்.பி



(கொழும்பு)

கெஹெலிய ரம்புக்வெல்ல அமைச்சுப் பதவியை வகிக்க முடியாது என ஜனாதிபதி தீர்மானித்ததையிட்டு மகிழ்ச்சி அடைவதாக பிவித்துரு ஹெல உருமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கெஹெலிய ரம்புக் வெல்லவுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிராக வாக்களித்து பாராளுமன்றத்தில் இருப்பவர்கள் அவரை பாதுகாக்க நடவடிக்கை எடுத்தார்கள்.

நம்பிக்கையில்லா பிரேரணை தீர்மானத்தில் ஆளும் கட்சியினர் நடந்து கொண்டது பிழை. எதிர்க்கட்சி நடந்து கொண்டது சரி என்று ஜனாதிபதி தீர்மானித்திருக்கின்றார்.

இங்கு நெருக்கடியாக இருக்கும் மிகப்பெரிய விடயம் ஊழல் மோசடி. ஆகவே அமைச்சர் ரமேஸ் பத்திரன இந்த திருடர்களுடன் போராடி ஜெயிக்க வேண்டும்.

இந்த விடயத்தை மாற்றுவது என்பது இலகுவான விடயம் அல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# அமைச்சரை மாற்றுவதால் தீர்வு கிடைக்காது

(கொழும்பு)

நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்காக அமைச்சரை மாற்றுவது மட்டும் தீர்வாக அமையாது என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "இந்தப் பதவி மாற்றமானது தலை வலிக்குத் தலையணையை மாற்றுவது போன்றது. இவை அனைத்தும் கண்கட்டும் வித்தைகள். இவை மூலம் பிரச்சினைகள் தீர்க்கப்படாது.

நாட்டில் இருக்கும் சுகாதார பிரச்சினைகளுக்கு ஒரு அமைச்சரை மாற்றி இன்னொரு அமைச்சரை நியமிப்பதன் மூலம் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்றும் கூறினால் இதனை நம்ப முடியுமா?

சங்கீதக் கதிரை விளையாட்டே இதில் இடம்பெறுகின்றது. மக்களின் எதிர்ப்பு எரிமலையை போன்று எரியும் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தின் பதில் இதுவாய் இருக்கின்றது.


வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுப்பதே இதற்கான சரியான தீர்வு" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 260 | 220 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 350 | 300 |
| தக்காளி | 220 | 250 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 150 | 150 |
| கோவா | 200 | 180 | 180 | 200 |
| கரட் | 250 | 300 | 300 | 350 |
| பூசணி | 100 | 80 | 80 | 100 |
| புடோல் | 100 | 250 | 120 | 240 |
| வாழைக்காய் | 200 | 180 | 160 | 250 |
| சின்ன வெங்காயம் | 350 | 320 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 260 | 240 | 250 | 300 |
| பாகற்காய் | 400 | 400 | 350 | 500 |
| வெண்டக்காய் | 120 | 220 | 100 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 120 | 200 |
| பயற்றங்காய் | 350 | 350 | 300 | 300 |
| லீக்ஸ் | 200 | 160 | 180 | 200 |
| பீற்றூட் | 140 | 140 | 160 | 150 |
| கறிமிளகாய் | 400 | 350 | 350 | 400 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 200 | 300 |
| போஞ்சி | 450 | 450 | 500 | 500 |
| கத்தரிதம்புள்ள | 220 | 150 | 160 | 240 |
| கீரை - 1 பிடி | 100 | 70 | 80 | 120 |
| தேசிக்காய் | 1400 | 1300 | 1400 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 400 | 450 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 350 | 350 | — | 400 |
| முள்ளங்கி | 120 | 140 | — | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 60 | 60 |
| வல்லாரை | 40 | 35 | 30 | 60 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 200 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2947

யுவதர்சன்




வசந்த்




வந்தீஸ்




குறிஞ்சிநிலா




சஞ்சனா




நித்தியா





நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# 'ககன்யா' விண்கலத்தை அனுப்பிய இஸ்ரோ



(டில்லி)

மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும் திட்டத்தை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் (இஸ்ரோ) விஞ்ஞானிகள் ஆரம்பித்துள்ளனர்

அதன்படி முதல்கட்ட சோதனையாக நேற்று முன்தினம் ககன்யான் மாதிரி விண்கலத்தை சிறியவகை ரொக்கெட் மூலம் விண்ணில் சுமார் 16.6 கிலோமீற்றர் தூரத்திற்குக் கொண்டு சென்று, அதன்பிறகு அதில் இருந்து மாதிரி விண்கலத்தை பிரிக்க திட்டமிடப்பட்டு இருந்த நிலையில் அதன்படி 17 கிலோமீற்றர் உயரத்தில் ரொக்கெட்டில் இருந்து மாதிரி விண்கலம் வெற்றிகரமாக தனியாக பிரிந்துள்ளதாக விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். (நி-5-6)

# கனேடிய தூதரக அதிகாரிகளின் குறுக்கீடுதான் பிரச்சினை

## ஜெய்சங்கர்



(டில்லி)

கனேடிய தூதரக அதிகாரிகளை இந்தியாவிலிருந்து வெளியேறச் சொன்னது ஏன் என்பதற்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் விளக்கமளித்துள்ளார்.

ஜூன் மாதம் 18ஆம் திகதி, சீக்கிய மதத்தலைவரான ஹர்தீப் சிங் நிஜ்ஜர் என்பவர் கனடாவில் கொல்லப்பட்ட நிலையில், அந்த சம்பவத்தின் பின்னணியில் இந்தியா இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வெளிப்படையாக குற்றம் சாட்டியிருந்தார்.

அதைத் தொடர்ந்து இரு நாடுகளும் எடுத்த நடவடிக்கைகளால், இரு நாடுகளுக்குமிடையிலான தூதரக உறவில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சமீபத்தில், கனேடிய தூதரக அதிகாரிகள் 41 பேரை இந்தியாவிலிருந்து வெளியேற்றுமாறு இந்தியா கனடாவை அறிவுறுத்தியது. அதன்படி, கனடா இந்தியாவிலிருந்து கனேடிய தூதரக அதிகாரிகள் 41 பேரை குடும்பத்துடன் திரும்ப அழைத்துக் கொண்டது.

இந்நிலையில், கனேடிய தூதரக அதிகாரிகளை இந்தியாவிலிருந்து வெளியேறச் சொன்னது ஏன் என்பதற்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரான எஸ். ஜெய்சங்கர் விளக்கமளித்துள்ளார்.

கனேடிய தூதரக அதிகாரிகளை வெளியேற்றியது தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாட்டை மீண்டும் உறுதி செய்த அவர், இந்திய உள்விவகாரங்களில் கனேடிய தூதர்களின் குறுக்கீடு கவலையை ஏற்படுத்தியதாக தெரிவித்தார்.


தொடர்ச்சியாக கனேடியர்கள் இந்திய உள்விவகாரங்களில் தலையிடுவது தொடர்பில் கவலை ஏற்பட்டதைத் தொடர்ந்தே அவர்களுடைய எண்ணிக்கை குறைக்கப்பட்டது என்று கூறிய ஜெய்சங்கர், வியன்னா ஒப்பந்தத்திற்குட்பட்டே அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# எகிப்து மீது இஸ்ரேல் பீ

# சர்வதேச வர்த்தகம் மு

(கைரோ)

**இஸ்ரேல் நாட்டின் பீரங்கியில் இருந்து வந்த குண்டுகள் தாக்கியது பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் சர்வதே முடங்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.**





இஸ்ரேல் -ஹமாஸ் இடையே சண்டை இரண்டு வாரங்களுக்கு மேலாகத் தொடரும் நிலையில், நேற்று முன்தினம் திடீரென எகிப்து வீரர்கள் சிலர் இஸ்ரேல் பீரங்கி தாக்குதலால் காயமடைந்துள்ளனர்.

எகிப்து ஹமாஸ் ஆதரவு

நி

கூ

யா

# உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக்குதல்-6 பேர் பலி

(கீவ்)

உக்ரைனின் கார்கீவ் பிராந்தியத்தில் உள்ள தபால் விநியோக மையத்தின் மீது நேற்று முன்தினம் ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டதுடன், 16 பேர் காயமடைந்துள்ளனர்.



கார்கீவ் பிராந்திய ஆளுநர் ஓலே சினிஹுபோவ் இந்தத் தாக்குதல் தொடர்பில் தெரிவிக்கையில், "இது ஒரு பொது மக்களுக்கான இடம்" கொல்லப்பட்டவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் அனைவரும் உக்ரைனிய தபால் சேவை ஊழியர்கள்.

உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி இது தொடர்பில் வெளியிட்ட பதிவில், 'ரஷ்ய ஏவுகணைகள் தபால் விநியோக மையத்தைத் தாக்கின.

"ரஷ்ய பயங்கரவாதத்திற்கு நாம் ஒவ்வொருநாளும் முறையாகப் பதிலளிக்க வேண்டும். இந்தப் பயங்கரவாதத்திற்கு எதிராக போராட நாம் உலகளாவிய ஒற்றுமையை வலுப்படுத்த வேண்டும்" எனக் கூறியுள்ளார்.(நி-5-6)



# இஸ்ரேல் மீ

## ஈரானை எச்ச

(வோஷிங்டன்)

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே சண்டை நடைபெறும் சூழலில் இஸ்ரேல் மீது தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது என்று அமெரிக்கா, ஈரானை எச்சரித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ் பீரங்கித் தாக்குதல் முடங்கும் அபாயம்!

### ண்டுகள் எகிப்தைத் சர்வதேச வர்த்தகம்



நிலைப்பாட்டை எடுத்துள்ளதாகக் கூறப்பட்டாலும் அவர்கள் நேரடியாக மோதலில் ஈடுபடவில்லை.

மேலும், சர்வதேச வர்த்தகத்தின் அடிநாதமாக இருக்கும் சுயஸ் கால்வாய் எகிப்து நாட்டில்தான் இருக்கிறது. உலகின் ஒட்டுமொத்த வர்த்தகத்தில் சுமார் 12% இந்த சுயஸ் கால்வாய் வழியாகவே நடக்கிறது.

இந்தச் சண்டையில் எகிப்து உள்ளே வந்து சுயஸ் கால்வாய் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டால் அது சர்வதேச அளவில் வர்த்தகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். உலகின் அனைத்து நாடுகளும் இதனால் பாதிக்கப்படும் அபாயம் இருக்கிறது.

இதனால் எகிப்து மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல் பரபரப்பைக் கிளப்பியது. இதற்கிடையே இந்த தாக்குதல் குறித்து இஸ்ரேல் விளக்கமளித்துள்ளது. அதாவது இது திட்டமிடப்பட்ட தாக்குதல் இல்லை என்றும் தவறுதலாக எகிப்து மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இஸ்ரேல் இராணுவம் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், கெரெம் ஷாலோம் பகுதியில் எல்லையை ஒட்டிய எகிப்திய போஸ்ட் மீது பீரங்கி ஒன்று. எதிர்பாராத விதமாக வெடித்துச் சிதறியது.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இது குறித்து இஸ்ரோல் இராணுவம் வருத்தம் தெரிவிக்கிறது என பதிவிட்டுள்ளது.

தொடரும் தாக்குதலில் இருதரப்பிலும் இதுவரை 6,000 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## இரட்டை மூக்கு கொண்ட அரியவகைப் பூனை



(லண்டன்)

பிரித்தானியாவில் அரிய வகை பூனை ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

பிரித்தானிய வாரிங்டன் தத்தெடுப்பு நிலைய ஊழியர்கள் முதலில் பூனைக்கு பெரிய மூக்கு உள்ளதென நினைத்தனர்.

எனினும் சோதனையின் போது தான் தெரியவந்தது அந்த 4 வயதுப் பூனைக்கு 2 மூக்குகள் உள்ளன என்று.

அதற்கு பிறக்கும் போதே 2 மூக்குகள் இருந்திருக்கக் கூடும் என்றும் விலங்குநல மருத்துவர் ஒருவர் கூறியுள்ளார்.

இப்படியான பூனை மிகவும் அரியது என்று சொன்ன அவர், அதனால் பூனைக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை எனவும் தெரிவித்தார். (நி-5-6)

## சீனாவில் பாய்லர் வெடித்ததில் 6 பேர் உயிரிழப்பு, 4 பேர் காயம்



(பீஜிங்)

சீனாவில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் பாய்லர் வெடித்ததில் 6 பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

தெற்கு சீனாவின் குவாங்சி ஜுவாங் பிராந்தியம் பிங்குவோ நகரில் அலுமினிய தொழிற்சாலை ஒன்று உள்ளது.

இங்கு வழக்கம்போல் தொழிலாளர்கள் வேலை பார்த்து கொண்டிருந்தனர். அலுமினியக் கம்பிகளை வெளியேற்றும் சமயத்தில் உயர் வெப்பநிலை காரணமாக பாய்லர் வெடித்து சிதறியது.

இதனால் அங்கிருந்தவர்கள் பயத்தில் அலறியடித்துக்கொண்டு வெளியே ஓடினர்.

இருப்பினும் இந்த விபத்தில் 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 4 பேருக்கு படுகாயம் ஏற்பட்டது. மீட்புப்படையினர் அவர்களை மீட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதித்தனர். (நி-5-6)

# காசா எல்லையில் படைகளை குவித்தது இஸ்ரேல்

(காசா)

தரைவழித் தாக்குதலுக்குத் தயார் நிலையில் தனது படைகளை இஸ்ரேல் இராணுவம் காசா எல்லையில் வியூகம் அமைத்து நிறுத்தி வைத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

மேற்கத்தேய நாடுகள் மற்றும் ஐ.நா சபையின் வலியுறுத்தல் காரணமாக இஸ்ரேல் தரைவழித் தாக்குதலை ஒத்திவைக்க நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் இஸ்ரேல் இராணுவம் தயார் நிலையில் காசாவை நோக்கி நிறுத்தப்பட்டுள்ளது.



இதனிடையே இஸ்ரேல்-ஹமாஸ் யுத்தத்தில் இருதரப்பிலும் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 6 ஆயிரத்தைத் தாண்டிவிட்டது.

தரைவழித் தாக்குதல் தொடங்கப்பட்டால் உயிர்ச்சேதம் பல மடங்கு அதிகமாகும் என்றும் அஞ்சப்படுகிறது. (நி-5-6)

## ஈராக்கிற்கு செல்ல வேண்டாம் எச்சரிக்கை விடுத்த அமெரிக்கா

(வோஷிங்டன்)

மறுஅறிவிப்பு வரும் வரை தமது குடிமக்கள் யாரும் ஈராக்கிற்குச் செல்ல வேண்டாம் என்றும் பாக்தாத் சர்வதேச விமான நிலையத்தை பயன்படுத்த வேண்டாம் என்றும் அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈராக்கில் அமெரிக்கர்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் உருவாகியுள்ளதைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே மோதல் தொடங்கியதையடுத்து, ஈராக் உள்ளிட்ட பிராந்திய நாடுகளில் அமெரிக்க வீரர்கள் தாக்கப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# ் மீது தாக்கக்கூடாது எச்சரிக்கும் அமெரிக்கா

மத்திய கிழக்கு வட்டாரத்தில் அமெரிக்கத் தற்காப்பு அமைச்சு அதன் இராணுவ ஆயத்த நிலையை வலுப்படுத்திய சில மணிநேரத்தில் அந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

பூசல் வலுத்துவரும் வேளையில் ஈராக்கில் உள்ள தனது தூதரகத்திலிருந்து ஊழியர்கள் அனைவரையும் வெளியேறும்படியும் அமெரிக்கா நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

எந்தத் தரப்பும் இந்தத் தருணத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி இஸ்ரேல் மீது கூடுதல் தாக்குதல்ளை நடத்தக்கூடாது என்று அமெரிக்கா கூறியுள்ளது.

அமெரிக்கத் தற்காப்பு அமைச்சர் லாயிட் ஆஸ்டின் ஆகாயத் தற்காப்புக் கட்டமைப்பைச் செயற்படுத்தும்படி உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் கூடுதல் துருப்புகள் மத்திய கிழக்கிற்கு அனுப்பப்படலாம் என்றும் அவர் தெரிவித்தார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிகளுக்கான ஆவணங்களை கோரி வன்னி விளாங்குள மக்கள் போராட்டம்

(முறிகண்டி)

**தமது காணிகளுக்கான ஆவணங்களை தரக்கோரி முல்லை வன்னி விளாங்குள மக்கள் மாந்தை பிரதேச செயலகம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.**



கடந்த 2014 ஆம் ஆண்டு மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தால் துவரங்குளம் வயல் காணிக்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை உறுதிப் படுத்தி (முதல் பிரதியை) எமக்குத் தாருங்கள்.எனவும் இதுவரை காலமும் பிரதேச செயலகத்தால் அனுமதிகள் மறுக்கப்பட்டு வருவதாகவும் , மாகாண காணி ஆணையாளர் வழங்குமாறு தெரிவித்தும் பிரதேச செயலகம் வழங்க முன் வரவில்லை எனத் தெரிவித்தே குறித்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். நில அபகரிப்புச் செய்பவர்களுக்கு சாட்சி சொல்லும் பிரதேச செயலகம்""வனலாகா அதிகாரிகளுக்கு வால் பிடிக்காதே" அடக்காதே அடக்காதே மக்களை அடக்காதே போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு பாண்டியன்குளம் சந்தியிலிருந்து பேரணியாக புறப்பட்ட கிராம மக்கள் பிரதேச செயலக வாசலில் நின்றவாறு கோசங்களை எழுப்பினர்.

இறுதியில் உதவி பிரதேச செயலாளரிடம் மகஜரும் பிரதேச மக்களால் கையளிக்கப்பட்டது . இதேவேளை இது தொடர்பில் உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று பிரச்சினைக்கான தீர்வினை பெற்றுதருவதாக கூறியதை அடுத்து மக்கள் கலைந்து சென்றனர்.

(நி-5-6-299)

"Ammanai Saran Adainthal Athika Varamperalam"
SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST
5 Chapel Road, London W13 9AE. Phone:0208 810 0835
Founded:10-08-1991 Charity No:1014409
www.ammanealing.org Email:info@ammanealing.org






Following positions are available at the Temple
Please send us your application to our email address info@ammanealing.org
REF:SKTAT/25/10/23

Position 1: Minister of Religion (Hindu religious workers with non-pastoral role)
Candidate must be an experienced Hindu priest with 5 years service at various Hindu Temples either in Sri Lanka or South India.

Position 2: Priest to prepare Neivethyam (Prasadham)( Preparing Prasadham Food, Non-pastoral role )
Candidate must have sufficient experience in performing religious rituals in accordance with Hindi traditions & experience in preparing prasadham.

Position3: Priest garland maker and performing Abishekam and decorating Swamikal (Idols) non-pastoral role
Candidate must have experience in performing Abishekam, making various types of garlands and decorating Idols as per tradition

**Wages will be paid as per British Employment regulations.**

Closing date: 20.11.2023 20th November 2023.

(17560)

"Ammanai Saran Adainthal Athika Varamperalam"
SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST
5 Chapel Road, London W13 9AE. Phone:0208 810 0835
Founded:10-08-1991 Charity No:1014409
www.ammanealing.org Email:info@ammanealing.org






எமது ஆலயத்தில் கீழ்வரும் பணிநிலைகளுக்கான தகுதியான விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன.
தங்கள் பற்றிய முழு விபரங்களுடன் மேல் உள்ள மின்அஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.
REF:SKTAT/25/10/23

பணிநிலை 1 ஆலய சிவாச்சாரியார்(Hindu religious workers with non-pastoral role)
தகைமைகள்: விண்ணப்பதாரி ஆலயக் குருவாக தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு குறையாமல் பிரபல்யமான ஆலயங்களில் பணியாற்றி இருக்க வேண்டும்.
கடமைகள்: ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் பூசைகள் செய்தல்.

பணிநிலை 2 ஆலய சிவாச்சாரியார் நெய்வேத்தியம் செய்பணி
(Preparing Prasadham Food, Non-pastoral role)
தகைமைகள்: ஆலய சிவாச்சாரியாராக மடப்பள்ளியில் 5 ஆண்டுகளுக்குக் குறையாமல் எல்லா வகையான நெய்வேத்தியங்களும் செய்தவராக இருத்தல் வேண்டும்.
கடமைகள்: ஆலய நெய்வேத்தியம் செய்தல் வேண்டும்.

பணிநிலை 3 ஆலய சுவாமிகளுக்கு பூமாலை கட்டுதல், சுவாமிகளுக்கு அலங்காரம் செய்தல்
(Stringing garlands, decorating & dressing Idols, Non-pastoral role)
தகைமைகள்: ஆலய சிவாச்சாரியாராக மடப்பள்ளியில் 5 ஆண்டுகளுக்குக் குறையாமல் எல்லா வகையான நெய்வேத்தியங்களும் செய்தவராக இருத்தல் வேண்டும்.
கடமைகள்:ஆலய சுவாமிகளுக்கு பூமாலை கட்டுதல், சுவாமிகளுக்கு அலங்காரம் செய்தல்.
வேதனம் : பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது.
விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகைமைகளைக் கவனத்தில் கொண்டு நிர்ணயிக்கப்படும்.
விண்ணப்ப முடிவுத்திகதி: 20-11-2023 (20 நவம்பர் 2023)
(17560)

## சுயதொழிலாளர்களை ஊக்குவிக்க

# மாவட்ட செயலகத்தில் சந்தைப்படுத்தல் வசதி

### அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன்

(முறிகண்டி)

சுய தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனைக்காக திங்கள் மற்றும் புதன் கிழமைகளில் மாவட்ட செயலகத்தில் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமது உற்பத்திகளை சந்தைப்படுத்த முடியாது இருந்த நிலையில், மாவட்ட அரசாங்க அதிபரின் இந்த அறிவிப்பு உற்பத்தியாளர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அந்த வகையில், சுய தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு இந்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்த முடியும். இறக்குமதி உற்பத்திகள் மற்றும் பெருந் தொழிற்சாலை உற்பத்தி பொருட்களால் சந்தையில் உள்ளூர் உற்பத்திகளிற்கான சந்தை வாய்ப்பு மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

இந்த நிலையில், இவ்வாறான சந்தை வாய்ப்புக்களை வழங்குவதுடன், சனி, ஞாயிறு தினங்களில் விசேட சந்தை வாய்ப்பினை வழங்கி தம்மை ஊக்கப்படுத்துமாறு சுயதொழில் முயற்சியாளர்கள் சார்பில் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது.(நி-5-6-100)

# ஊரியான் தட்டுவன் கொட்டி புதிய விவசாய பாதை திறப்பு

(கிளிநொச்சி)

ஊரியான் தட்டுவன் கொட்டி புதிய விவசாய பாதை திறப்பு விழா இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு புதிய பாதை சந்திக்கும் ஆற்று வெளிப் பகுதியில் பிரதம விருந்தினர் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் கௌரவ விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் சிறப்பு விருந்தினர்களாக மாகாண நீர்ப்பாசன பொறியியலாளர் சுதாகர், கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைத் திணைக்கள பிரதி ஆணையாளர் பா. தேவரதன் மற்றும் கண்டாவளை பிரதேச செயலக உதவி அரசாங்க அதிபர் த.பிருந்தாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-5-6)

# முல்லையில் இறந்தநிலையில் கரையொதுங்கிய சுறா



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு- அளம்பில் கடற்கரையில் உயிரிழந்த நிலையில் சுறா ஒன்று கரையொதுங்கியுள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை முல்லை அளம்பில் கடற்கரையில் 15 அடி நீளமுடைய சுறா ஒன்றே இவ்வாறு உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது.

இலங்கை கடற் கரையில் தொடர்ச்சியாக கடல்வாழ் உயிரினங்கள் இறந்த நிலையில் மீட்கப்பட்டு வருகின்றன இது தொடர்பில் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் பகுப்பாய்வு செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் புதிய வகை நுளம்பினம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தவளைகளின் இரத்தத்தை குடிக்கும் புதிய வகை நுளம்பு இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தின் மீரிகம பகுதியில் இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

'Uranotaenia Trilineata' என அடையாளம் காணப்பட்டுள்ள இது இலங்கையில் தற்போது பதிவாகியுள்ள சிறிய வகை நுளம்பு இனமாகும் என பூச்சியியல் அதிகாரி கயான் ஸ்ரீ குமாரசிங்க தெரிவித்தார்.

இவை 2-3 மில்லி மீற்றர் அளவுள்ளவை. சுமார் 108 வருடங்களுக்கு முன்னர் தென் கொரியாவில் இந்த நுளம்பு இனம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர், இவை தாய்லாந்தில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (நி-5-6)

## சுதந்திரக் கட்சிக்கு மேலும் அமைச்சுப் பதவிகள்?

# பொதுஜன பெரமுன கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு மேலும் அமைச்சுப் பதவிகளை வழங்கியுள்ளமைக்கு கட்சி என்ற ரீதியில் கடும் எதிர்ப்பை வெளியிடுவதாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகசந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

அவை அனைத்தும் பொய்யான குற்றச்சாட்டுகள் என இறுதியில் நிரூபணமானது. ஆனாலும் இவ்வாறான சூழலில் சில மாற்றங்களை கொண்டு வருவது சிறந்தது என்று ஜனாதிபதி நினைத்திருக்கலாம்.

ஜனாதிபதி இந்த நாட்டை நடத்தி செல்வதற்கான பலத்தை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியே வழங்குகின்றது. பொது ஜனபெரமுன கட்சியின் உறுப்பினர்களே அதிக ஆதரவை வழங்குகின்றனர். ஆனாலும் ஐந்து அமைச்சர்களே அமைச்சு பதவிகளில் இருக்கின்றார்கள்.

அதிலும் ஒன்றை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு வழங்கி இராஜாங்க அமைச்சு பதவி ஒன்றையும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு வழங்கியுள்ளமை குறித்து நாங்கள் சந்தோசப்பட மாட்டோம்.

இது தொடர்பில் எமது கட்சி என்ற ரீதியில் நாங்கள் கடும் எதிர்ப்பை தெரிவிக்கின்றோம் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# புத்தக அட்டையில் மறைத்து கொக்கேயின் கடத்தல்



(கொழும்பு)

பெரிய ஆங்கில எழுத்துக்கள் கொண்ட 8 சிறுவர் கதைப் புத்தகங்களின் அட்டையில் இருபத்து மூன்று கோடி ரூபாய் பெறுமதியான கொக்கேயின் போதைப் பொருள் மறைத்து வைத்து வெளிநாட்டு பெண் ஒருவரால் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட நிலையில், குறித்த பெண்சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் முதன்முறையாக இலங்கைக்கு வந்த 42 வயதான இந்தோனேஷிய பெண் எனவும், அவர் அந்நாட்டில் ஜவுளி வர்த்தகத்திலீடுபட்டு வருவதாகவும் ஆரம்பகட்ட சுங்க விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அவர் முதலில் எத்தியோப்பியாவின் அடிஸ் அபாபாவிலிருந்து தனது பயணத்தை ஆரம்பித்து இந்த போதைப்பொருளுடன் கட்டாரின் டோஹாவுக்கு சென்றுள்ளமையும் தெரிய வந்துள்ளது. (நி-5-6)

# ஐப்பசி மாத இராசி பலன்கள் 18.10.2023-16.11.2023

## கும்பம்

**நட்பால் நன்மை உண்டு என்று சொல்லும் கும்ப இராசி வாசகர்களே!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி விரய ஸ்தானத்தில் வக்கிரம் பெற்று விளங்குகின்றார். விரயாதிபதி வக்கிரம் பெறுவது நன்மை தான் என்றாலும், ராசிநாதனாகவும் சனி விளங்குவதால் எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வதே நல்லது. கூடுதல் விரயங்கள் வந்தாலும் அதற்கேற்ப வருமானங்கள் எதிர்பார்த்தபடி வந்து சேரும். 2 இல் இராகு இருப்பதால் தொழில் வளர்ச்சியும், புதிய ஒப்பந்தங்களும் கிடைக்கும். ஆனால் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய நேரமிது.

**சனி வக்கிர நிவர்த்தி!**

ஐப்பசி 6 ஆம் திகதி மகர இராசியில் சஞ்சரிக்கும் சனி வக்கிர நிவர்த்தியாகின்றார். உங்கள் இராசிநாதனாகவும், விரயாதிபதியாகவும் விளங்குபவர் சனி. அவர் வக்கிர நிவர்த்தியாகிப் பலம் பெறுவதால் உடல்நலம் சீராக வழி பிறக்கும். அதே நேரம் விரயங்கள் கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும். குடும்பத்திற்காகவும், குழந்தைகளுக்காகவும், கூட்டாளிகளுக்காகவும் விரயங்களைச் செய்யக்கூடிய சூழ்நிலை உருவாகும். வீண் விரயங்களிலிருந்து விடுபட்டு சுபவிரயங்களை மேற் கொள்ளவும் முயற்சிப்பது நல்லது. இல்லத்திற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் முதலீடு செய்யலாம். திருமண வயதடைந்த பெண் குழந்தைகளுக்கு சீர்வரிசைப் பொருள் வாங்குவதில் கவனம் செலுத்தலாம்.

**குரு வக்கிரம்!**

மாதம் முழுவதும் குரு பகவான் மேஷ இராசியிலேயே வக்ரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசிக்கு தனலாபாதிபதியாக விளங்கும் குரு வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பணத்தட்டுப்பாடுகள் அதிகரிக்கலாம். ஒரு சிலருக்கு ஒரு கடனை அடைக்க மற்றொரு கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும். இதுபோன்ற காலங்களில் பிறருக்கு பணப்பொறுப்பு சொல்வதை தவிர்ப்பது நல்லது. வெளிநாட்டு முயற்சியில் தாமதம் ஏற்படும். இளைய சகோதரத்தோடு இருந்த உறவில் விரிசல்கள் ஏற்படலாம். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது.

**நீச்சம் பெறும் சுக்கிரன்!**

ஐப்பசி 16 ஆம் திகதி கன்னி இராசிக்கு சுக்கிரன் வருகின்றார். அங்கு அவர் நீச்சம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பெற்றோர்களின் ஆதரவு குறையும். பணநெருக்கடி காரணமாக வாங்கிய இடத்தை விற்க நேரிடும். வாகனப் பழுதுகளின் காரணமாக வாட்டம் ஏற்படும். வெளிநாட்டிலிருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக்கொள்ள இயலாமல் போகலாம். கவனம் தேவைப்படும் நேரமிது.

**விருச்சிக புதன்!**

ஐப்பசி 17 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு புதன் வருகின்றார். உங்கள் இராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியானவர் புதன். அவர் 10 ஆம் இடத்திற்கு வரும் இந்த நேரம் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். வியாபார அபிவிருத்தி உண்டு. பொருளாதார நிலை சீர்படும். சருமப் பிரச்சினைகள் தகுந்த சிகிச்சையினால் குணமடையும். புண்ணிய காரியங்களுக்கு பொருளுதவி செய்வீர்கள்.

பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு மக்கள் செல்வாக்கு மேலோங்கும். வியாபரம் தொழில் செய்பவர்களுக்கு அதை விரிவு செய்யும் சூழல் உருவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். கலைஞர்களுக்கு புதிய முயற்சிகள் வெற்றி தரும். மாணவ-மாணவியர்களுக்கு மறதி அதிகரிக்கும் நேரம் என்பதால் கல்வியில் அதிக கவனம் செலுத்துவது நல்லது. பெண்களுக்கு குடும்ப முன்னேற்றம் கூடும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும்.

## மீனம்

**உழைப்பின் மூலமே உயர்வு காண இயலும் என்று சொல்லும் மீன இராசி வாசகர்களே!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் இராசிநாதன் குரு வக்கிரம் பெற்றிருக்கின்றார். உங்கள் இராசியிலேயே ராகுவும் சப்தம ஸ்தானத்தில் கேதுவும் இருக்கின்றார்கள். எனவே கால சர்ப்ப தோஷத்தின் பின்னணியில் உங்கள் இராசி அமைந்துள்ளது. எனவே ஏற்றமும், இறக்கமும் கலந்த வாழ்க்கை உருவாகும். ஒரு தொகை செலவழிந்த பின்னரே அடுத்த தொகை கரங்களில் புரளும். தொழில் மாற்றங்களும், இடமாற்றங்களும் கூட உருவாகலாம். யோகபலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்வதன் மூலம் தக்க பலன்கள் உங்களுக்குக் கிடைக்கும்.

**சனி வக்கிர நிவர்த்தி!**

ஐப்பசி 6 ஆம் திகதி சனி மகர இராசியில் வக்ர நிவர்த்தியாகின்றார். உங்கள் ராசிக்கு சனி பகவான் லாப ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதியாவார். அவர் வக்கிர நிவர்த்தியாகிப் பலம் பெறும் பொழுது லாபம் சிறப்பாக வந்தாலும் விரயங்கள் கூடுதலாகவே இருக்கும். யாரையும் நம்பி எந்தப் பொறுப்புகளையும் ஒப்படைக்க இயலாது. பயணங்கள் அலைச்சல் தருவதாக இருக்குமே தவிர ஆதாயம் தருவதாக இருக்காது. உத்தியோகத்தில் உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்குமா என்பது சந்தேகம் தான். இடம் வாங்குவது, வீடு வாங்குவது பற்றிய சிந்தனை அதிகரிக்கும். கூடிக் கொண்டே சென்ற கடன் சுமை குறைய வழிபிறக்கும். தொழிலில் பழைய பங்குதாரர்கள் விலகுவதாகச் சொல்லி அச்சுறுத்துவர்.

**குரு வக்கிரம்!**

மாதம் முழுவதும் குரு பகவான் மேஷ இராசியிலேயே வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசிநாதன் குரு தன ஸ்தானத்தில் வக்கிரம் பெறுவதால் பண நெருக்கடி கொஞ்சம் அதிகரிக்கும். எந்தக் காரியத்தையும் பணத்தை வைத்துக் கொண்டு செய்ய இயலாது. காரியத்தை தொடங்கி விட்டால் பணப்புழக்கம் வந்து சேரும். உறவினர்களால் சில உபத்திரவங்கள் ஏற்படலாம். குடும்ப ஒற்றுமை கொஞ்சம் குறையும். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் நடைபெறாமல் போகலாம். தொழிலில் திடீர் மாற்றங்கள் உருவாகும். உத்தியோகத்தில் உள்ள வர்களுக்கு மேலதிகாரிகளுடன் பிரச்சினைகள் வரலாம்.

**நீச்சம் பெறும் சுக்கிரன்!**

ஐப்பசி 16 ஆம் திகதி கன்னி இராசிக்கு சுக்கிரன் வருகின்றார். அங்கு அவர் வலிமை இழந்து நீச்சம் பெறுகின்றார். உங்கள் இராசிநாதன் குருவிற்கு சுக்கிரன் பகை கிரகமாவார். அவர் நீச்சம் பெறுவது நன்மை தான். சுபச்செலவுகள் அதிகரிக்கும். பயணங்கள் பலன் தரும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணைவர்.

**விருச்சிக புதன்!**

ஐப்பசி 17 ஆம் திகதி விருச்சிக இராசிக்குப் புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் 9 ஆம் இடத்திற்கு வரும்பொழுது பெற்றோர்களின் ஆதரவு திருப்தி தரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. உறவினர்களுடன் ஏற்பட்ட கருத்து மோதல்கள் அகலும். வெளிநாட்டில் பணிபுரிய ஒருசிலருக்கு அழைப்புகள் வரலாம். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிடைக்கும்.

பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு மக்கள் செல்வாக்கு அதிகரிக்கும். வியாபாரம், தொழில் செய்பவர்கள் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். கலைஞர்களுக்குப் பெருமை சேரும். மாணவ-மாணவியர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். பெண்களுக்கு வருமானம் போதுமானதாக இருக்கும். உடல்நலனில் கவனம் தேவை.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின்


பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

316





அதன் பட்டுத் திரைகள் விலகியதும் உள்ளே பழுவூர் இளைய ராணி நந்தினி தேவியின் சுந்தர மதிவதனம் தெரிந்தது.

குந்தவை யானையிலிருந்தும் நந்தினி பல்லக்கிலிருந்தும் இறங்கினார்கள். நந்தினி விரைந்து முன்னால் சென்று குந்தவைக்கு முகமன் கூறி வரவேற்றாள். அந்த வரவேற்பைக் குந்தவை புன்னகை புரிந்து அங்கீகரித்தாள்.

சோழ நாட்டின் அந்த இரு பேரழகிகளையும் அங்கு ஒருங்கே கண்ட ஜனத்திரளின் உற்சாகம் கரைபுரண்டு ஓடியது. நந்தினி பொன் வர்ணமேனியாள் குந்தவை செந்தாமரை நிறத்தினாள். நந்தினியின் பொன்முகம் பூரணசந்திரனைப்போல வட்ட வடிவமாயிருந்தது குந்தவையின் திருமுகம் கைதேர்ந்த சிற்பிகள் வார்த்த சிலை வடிவத்தைப் போல் சிறிது நீள வாட்டமாயிருந்தது. நந்தினியின் செவ்வரியோடிய கருநிறக் கண்கள் இறகு விரித்த தேன் வண்டுகளைப்போல் அகன்று இருந்தன் குந்தவையின் கருநீல வர்ணக் கண்கள் நீலோத்பலத்தின் இதழைப்போல் காதளவு நீண்டு பொலிந்தன. நந்தினியின் மூக்கு தட்டையாக வழுவழுவென்று தந்தத்தினால் செய்ததுபோல் திகழ்ந்தது. குந்தவையின் மூக்கு சிறிது நீண்டு பன்னீர்ப்பூவின் மொட்டைப்போல் இருந்தது. நந்தினியின் சிறிது தடித்த இதழ்கள் அமுதம் ததும்பும் பவளச் செப்பைப் போல் தோன்றியது. குந்தவையின் மெல்லிய இதழ்களோ தேன் பிலிற்றும் மாதுளை மொட்டெனத் திகழ்ந்தது. நந்தினி தன் கூந்தலைக் கொண்டை போட்டு மலர்ச்செண்டுகளைப் போல் அலங்கரித்து இருந்தாள். குந்தவையின் கூந்தலோ "இவள் அழகின் அரசி" என்பதற்கு அடையாளமாகச் சூட்டிய மணி மகுடத்தைப்போல் அமைந்திருந்தது.

இப்படியெல்லாம் அந்த இரு வனிதா மணிகளின் அழகையும் அலங்காரத்தையும் தனித்தனியே பிரித்து ஒப்பிட்டுப் பார்த்து எல்லோரும் மகிழ்ந்தார்கள் என்று சொல்ல முடியாது தான். ஆயினும் பொதுப்படையாக இருவரும் நிகரில்லாச் சௌந்தரியவதிகள் என்பதையும், அங்க அமைப்பிலும் அலங்காரத்திலும் மாறுபட்டவர்கள் என்பதையும் அனைவருமே எளிதில் உணர்ந்தார்கள். நந்தினியின் பேரில் அதுவரையில் நகர மாந்தர்களுக்கு ஓரளவு அதிருப்தியும் அசூயையும் இருந்து வந்தன. குந்தவைப் பிராட்டியை ஒவ்வொருவரும் தங்கள் குல தெய்வமெனப் பக்தியுடன் பாராட்டினார்கள். ஆனால், இப்போது பழுவூர் இளைய ராணி கோட்டை வாசலுக்கு வந்து இளைய பிராட்டியை வரவேற்றது மக்களுக்கு மிகுந்த குதூகலத்தை விளைவித்தது.

மக்கள் இவ்விதம் மகிழ்ச்சியில் ஆழ்ந்திருக்கையில் நந்தினிக்கும், குந்தவைக்கும் நடந்த சம்பாஷணை, மின்னலை மின்னல் வெட்டும் தோரணையில் அமைந்தது.

"தேவி! வருக! வருக! எங்களை அடியோடு மறந்து விட்டீர்களோ, என்று நினைத்தோம். இளைய பிராட்டியின் கருணை எல்லையற்றது என்பதை இன்று அறிந்தோம்" என்றாள் நந்தினி.

"அது எப்படி ராணி! தூரத்திலிருந்தால் மறந்து விட்டதாக அர்த்தமா? நீங்கள் பழையாறைக்கு வராதபடியால் என்னை மறந்து விட்டதாக வைத்துக் கொள்ளலாமா?" என்றாள் குந்தவை.

"தேன் மலரை நோக்கி வண்டுகள் தாமே வரும் அழைப்பு வேண்டியதில்லை. அழகிய பழையாறைக்கு யாரும் வருவார்கள். இந்த அவலட்சணமான தஞ்சைக் கோட்டைக்குத் தாங்கள் வந்தது தங்கள் கருணையின் பெருமையல்லவா?"

"அது என்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள்? தஞ்சை புரியை அவலட்சண நகரமென்று சொல்லலாமா? இங்கே சௌந்தரியத்தையே சிறைப்படுத்தி வைத்திருக்கும்போது?." என்றாள் இளைய பிராட்டி.

"நானும் அப்படித்தான் கேள்வியுற்றேன். சக்கரவர்த்தியை இங்கே சிறைப்படுத்தி வைத்திருக்கிறார்கள் என்று. இனிமேல் கவலையில்லை அவரை விடுவித்துச் செல்லத் தாங்கள் வந்து விட்டீர்கள் அல்லவா?" என்று நந்தினி கூறிய போது அவளுடைய கண்களில் மின் வெட்டுத் தோன்றி மறைந்தது.

(தொடரும்...)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு

## யாழ். பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

### கற்றுக்கொள்

நன்மை செய்யக் கற்றுக் கொள்
நலமாய் வாழக் கற்றுக்கொள்
உண்மை பேசக் கற்றுக் கொள்
உயர்வாய் வாழக் கற்றுக் கொள்
துயரைப் போக்கக் கற்றுக்கொள்
துணிந்து செயற்படக் கற்றுக்கொள்
உழைந்து வாழக் கற்றுக்கொள்
உலகை ஆளக் கற்றுக்கொள்
இனிதாய் பேசக் கற்றுக்கொள்
வறுமை வந்தால் வாழ்வினில்
தாங்கி ஏற்கக் கற்றுக்கொள்
அன்பாய் வாழக் கற்றுக்கொள்
பண்பாய் பழகக் கற்றுக்கொள்
அழியாக் கலையை வாழ்வினில்
அறிந்து பயின்றிடக் கற்றுக்கொள்.

சி.பவித்ரா

### பெயர் சொல்ல

| | | |
|---|---|---|
| அரிச்சந்தின் | - | வாய்மை |
| கர்ணன் | - | கொடை |
| வீமன் | - | வலிமை |
| தருமன் | - | பொறுமை |
| துரியோதனன் | - | பொறாமை |
| நாரதர் | - | கலகம் |
| வசிட்டர் | - | தவம் |
| அருந்ததி | - | கற்பு |
| கம்பர் | - | கவிதை |
| விஜயன் | - | வில்வித்தை |
| இராமன் | - | பெற்றோர் சொல் தவறாமை |
| பரதம் | - | சகோதர பாசம் |
| மகாத்மா | - | அகிம்சை |
| பிரகலாதன் | - | கடவுள் பக்தி |

வி.புஷ்பராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் வெற்றி என்பது ஒரு மனிதன் பின்பற்றும் சத்தியத்தைப் பொறுத்தது.

– ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மகிடாசுரர்கள் வதம் செய்யப்படுவர்

இன்று விஜயதசமி. நவராத்திரி விரதம் நிறைவுற்று பத்தாம் நாள் விஜயதசமி கொண்டாடப்படுகிறது.

இந்துப் பண்பாட்டில் விஜயதசமி மிக முக்கியமான நாள். அதிலும் குறிப்பாக ஏடு தொடக்குகின்ற நாளாக விஜயதசமி அமைந்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மூன்று வயது நிரம்பிய பிள்ளைகள் முன்பள்ளி செல்வதற்கு முன்னதாக ஏடு தொடக்கப்படும்.

கல்வியைத் தொடங்குவதன் பொருட்டு அன்னம் பாலிக்கின்ற அரிசியில் உலகாளும் அன்னை பராசக்தியின் முன்பாக "அ" என்ற அகரத்தை எழுதி கல்வியைத் தொடக்குகின்ற பண்பாட்டு விழுமியம் இன்றுவரை போற்றப்பட்டு வருகிறது.

இதுதவிர, விஜயதசமியில் ஆயுத பூசை இடம்பெறுகின்ற வழமையும் உண்டு.

தொழிற்சாலைகள் தொடக்கம் அத்தனை நிறுவனங்கள் வரையில் விஜயதசமி அனுஷ்டிக்கப்படும்.

கூடவே அவரவர் தத்தம் தொழிலுக்குரிய ஆயுதங்களை வைத்து பூசை வழிபாடு செய்வர்.

செய்யும் தொழிலே தெய்வம் என்ற அடிப்படையில் செய் தொழிலுக்கு அடிப்படையாக இருக்கின்ற ஆயுதங்களை வைத்து வணங்குகின்ற நடைமுறை இந்துப் பண்பாட்டில் இருந்தாலும் அதனை அனைத்து சமயத்தவர்களும் பின்பற்றுவது நன்மை பயக்கும்.

இவை ஒருபுறமிருக்க, விஜயதசமி என்பது வெற்றிக்குரிய நாள் என்று பொருள்படுகிறது.

ஆம், மகிடாசுரன் என்பான் அதர்மத்தை உயர்வாகக் கருதி தேவர்களுக்கு கொடுமை செய்கின்றான்.

தேவர்கள் மகிடாசுரனிடம் இருந்து தம்மைக் காத்தருளும் பொருட்டு அன்னை பராசக்தியை ஒன்பது இரவுகள் வழிபாடு செய்கின்றனர்.

பத்தாம் நாள் தசமி. அன்று அன்னை பராசக்தி அதர்மத்தவனாகிய மகிடாசுரனை வதம் செய்து தேவர்களுக்கு அபயம் அளிக்கின்றார்.

அவ்வாறு மகிடாசுரன் வதம் செய்யப்பட்ட நாள் வெற்றிக்குரிய நாளாக அமைந்ததமையால் அஃது விஜயதசமி என்றாயிற்று.

இங்குதான் ஓர் உண்மையை பூலோகத்து மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதாவது அதர்மம் செய்பவர்கள் அழிக்கப்படுவர். அதேநேரம் தர்மத்தின் வழியில் நிற்பவர்கள் எஞ்ஞான்றும் காப்பாற்றப்படுவர்.

ஆக, விஜயதசமித் திருநாளில் மகிடாசுர வதம் என்பது அதர்மம் செய்பவர்களை எச்சரித்து தர்மத்தின் வழியில் – தெய்வீகத்தின் துணையோடு வாழக் கற்றுக் கொள்ளுங்கள் என்ற செய்தியை உரைப்பதாகும்.

அதேநேரம் இறை நம்பிக்கையோடு – இறை வழிபாட்டோடு – தர்மத்தை தமது உயர் அறமாகக் கொண்டு வாழ்பவர்களை தெய்வம் காப்பாற்றும் என்பதும் அவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுவர் என்ற உண்மையும் மகிடாசுரவதத்தினூடு எடுத்துரைக்கப்படுகிறது.

இந்த உண்மையை நாமும் உணர்ந்து வாழ்வோமாக

# வடக்கு-கிழக்கு மக்களின் மீள்குடியேற்றம்
## மூன்று வருடங்களுக்குள் பூர்த்தியாகும்-பிரசன்ன ரணதுங்க

(கொழும்பு)

அடுத்த மூன்றுவருடங்களுக்குள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்களின் மீள்குடியேற்றம் பூர்த்தி செய்யப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த 2 இலட்சத்து 74 ஆயிரத்து 120 குடும்பங்களைச் சேர்ந்த 9 இலட்சத்து 17 ஆயிரத்து 143 பேர் அந்த மாகாணங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, ஆயிரத்து 701 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 999 பேரை இன்னும் மீள்குடியேற்றப்பட உள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்துள்ளார்.(நி-5-6)

# டெங்கு காய்ச்சலுக்கான மாத்திரையை உருவாக்கியுள்ள ஜோன்சன் நிறுவனம்

(கொழும்பு)

ஜோன்சன் & ஜோன்சன் நிறுவனம் டெங்கு காய்ச்சலுக்கான மாத்திரையை உருவாக்கியுள்ளது.

நிறுவனம் வழங்கிய தரவுகளின்படி, அமெரிக்காவில்நடத்தப்பட்ட ஒருபரிசோதனையில் நோயைக் குணப்படுத்துவதற்கான நேர்மறையான நிலை ஒரு சில நோயாளிகளில் காட்டப்பட்டுள்ளது என்று ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

வளர்ந்து வரும் நோய் அச்சுறுத்தலான டெங்குவிற்கு தற்போது குறிப்பிட்ட சிகிச்சைகள் எதுவும் இல்லை என்று சிகாகோவில் உள்ள அமெரிக்கன் சொசைட்டி ஆஃப் ட்ராபிகல் மெடிசின் அண்ட் ஹைஜீன் தெரிவித்திருந்தது. இந்நிலையில், இது அதன் வருடாந்த கூட்டத்தில் இந்த சிகிச்சைகள் பற்றிய தரவை வழங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (நி-5-6)

# புளியங்குளம் வடக்கில்
## கிராம அலுவலருக்கு அச்சுறுத்தல்
### எண்மர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

புளியங்குளம் வடக்கு கிராம அலுவலரை அச்சுறுத்தியமை மற்றும் அவரது கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் 8 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா வடக்கு பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட புளியங்குளம் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் கிராம அலுவலராக கடமையாற்றும் கிராம அலுவலருக்கு தொடர்ச்சியாக கடமைக்குஇடையூறுவிளைவித்து வந்த நபர்கள் தொடர்பில்புளியங்குளம்பொலிஸ் நிலையத்தில் கிராம அலுவலரால் 3 தடவைகள் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் பொலிஸார் உரிய நடவடிக்கையெடுக்காத நிலையிருந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் கிராம அலுவலரின் பாதுகாப்பு கருதி பொலிஸார் உரிய நடவடிக்கையை விரைவாக எடுக்கக்கோரி அழுத்தம் கொடுக்கும் முகமாக வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 20 பிரிவுகளில்கடமையாற்றும்கிராம அலுவலர்கள் அனைவரும்ஒருநாள் அடையாள சுகவீனம் போராட்டத்தை நேற்று முன்னெடுத்திருந்தனர்.

இது தொடர்பில் வவுனியா ஐக்கிய கிராம அலுவலர் சங்கம் தனது கண்டன அறிக்கை ஒன்றினையும் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் கருத்துரைத்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ புளியங்குளம் வடக்கு கிராம அலுவலரை அச்சுறுத்தியமை மற்றும் அவரது கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் 8 பேர் கைது நேற்று செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட 8 பேரும் வவுனியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தலா 10 இலட்சம் பெறுமதியான சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.(ம-7)

# களஞ்சியசாலையிலிருந்து
## ரூ. 10 இலட்சம் பெறுமதியான நெல் காணாமல் போயுள்ளது

(கொழும்பு)

நெல் களஞ்சியசாலைகளில் வைக்கப்பட்டிருந்த சுமார் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான நெல் காணாமல் போயுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் உள்ளக ஊழியர்கள் குழுவொன்று விவசாய அமைச்சிடம் முறைப்பாடு செய்துள்ளது.

இவ்வாறாக குருநாகல் மாவட்டத்தில் உள்ள ஐந்து நெல் களஞ்சியசாலைகளில் இருப்புக்கள் காணாமல் போயுள்ளன.

இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பான முழுமையான அறிக்கையை மூன்று நாட்களுக்குள் வழங்குமாறு சந்தைப்படுத்தல் சபைத் தலைவருக்கு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான அறிக்கை கிடைத்தவுடன் முழுமையான விசாரணைக்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படும் என விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-7)

# யாழ். பல்கலையில் ஏடு தொடக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் விஜயதசமியை முன்னிட்டு ஏடு தொடக்கலும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

அதற்கமைய இன்று காலை யாழ்.பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயத்தில் மேற்குறித்த நிகழ்வுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

காலை 8 மணியளவில் பூஜைகள் ஆரம்பிக்கப்பட்டு, வாழை வெட்டு நிகழ்வு இடம்பெறவுள்ளதுடன் அதனைத் தொடர்ந்து 10 மணியளவில் ஏடு தொடக்கலும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ம-7)

# நீர்க்கட்டணம் உயராது உறுதியளித்த அமைச்சர்

(கொழும்பு)

மின்சாரக் கட்டணங்கள்அதிகரிக்கப்பட்டாலும், நீர்க்கட்டணத்தை உயர்த்த வேண்டிய அவசியமில்லை, எனவே அவ்வாறான பிரேரணை முன்வைக்கப்பட்டால் அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்காது என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டணம் தொடர்பில் மக்கள் மாத்திரமே எப்போதும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமெனக் கோருவது நியாயமானதல்ல. மின்சார சபை அதிகாரிகளும் உறுதியளிக்க வேண்டும் எனவும் அமைச்சர் வலியுறுத்தினார். (நி-5-6)

# சா/த பரீட்சை முடிவுகள் நவம்பர் இறுதிக்குள்
## பரீட்சைத் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

2022/23 க.பொ.த சாதாரணதரப் பரீட்சைகளின் பெறுபேறுகள் நவம்பர் மாத இறுதிக்குள் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெறுபேறுகளின் கணனிமயமாக்கல் தற்போது இடம்பெற்று வருவதாகத் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

இவ்வருட பரீட்சைகள் மே 29 முதல் ஜூன் 8 வரை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி II

18

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



எனினும் நல்லூர் மட்டுமே ஆரியச்சக்கரவர்த்திகளுடைய தலைநகராக அமைந்திருந்ததென்பதே இன்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் கருத்தாகும்.

### குலசேகர சிங்கையாரியன் (1246-1256)

குலசேகரசிங்கையாரியன் யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்தி வம்சத்தைச் சேர்ந்த ஒரு அரசனாவான். இவன் கி.பி 1246 தொடக்கம் 1256 ஆம் ஆண்டு வரை பத்தாண்டு காலம் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தான். கூழங்கை ஆரியச் சக்கரவர்த்தியின் மகனாக இவன் இருக்கலாம் என கருதப்படுகிறது

இவன் ஆட்சி முறைகளில் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்ததாகவும், நாட்டின் வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்ததுடன் வேளாண்மை வளர்ச்சியை ஊக்குவித்து மக்களை மகிழ்ச்சியுடன் வாழவைத்ததாகவும் 18 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது. குலசேகரசிங்கையாரியனைத் தொடர்ந்து அவனது மகனான குலோத்துங்க சிங்கையாரியன் அரசனானான்.

### குலோத்துங்க சிங்கையாரியன் (1256-1279)

குலோத்துங்க சிங்கையாரியன் யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்தி அரசவம்சத்தின மூன்றாவது அரசனாவான். இவன் கி.பி 1256 ஆம் ஆண்டு முதல் 1279 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தான். இவன் குலசேகரசிங்கையாரியனின் மகனும், கூழங்கைச் சக்கரவர்த்தி என அழைக்கப்பட்ட முதல் ஆரியச்சக்கர வர்த்தியின் பேரனும் ஆவான்.

இவனும் தன் முன்னோரைப் போலவே வேளாண்மை வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை எடுத்ததாக யாழ்ப்பாண வைபுவமாலை கூறுகிறது. தரிசு நிலங்களைத் திருத்திவேளாண்மைக்கு ஏற்ற நிலங்களாக இவன் மாற்றியதாக இந் நூல் கூறுகிறது. இவனுடைய 23 ஆண்டு ஆட்சிக் காலம் அமைதிக்காலமாக விளங்கியதாகவும் கூறப்படுகின்ற து.இவனைத் தொடர்ந்து இவனது மகனான விக்கிரம சிங்கையாரியன் ஆட்சிப்பொறுப்பை ஏற்றான்.

### விக்கிரமசிங்கையாரியன் (1279-1302)

விக்கிரமசிங்கையாரியன் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த ஆரியச்சக்கரவர்த்திகள் வம்சத்தைச் சேர்ந்த ஒரு அரசனாவான். இவ் வம்சத்தின் நான்காவது அரசனான இவன் கி.பி1279 ஆம் ஆண்டிலிருந்து 1302 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தான்.

இவன் காலம் உள்நாட்டுக் குழப்பங்கள் மிகுந்தகாலமாக இருந்தது. அக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த புத்த சமயத்தவரான சிங்களவருக்கும், இந்துத் தமிழருக்கும் கலகம் மூண்டது. இரண்டு தமிழர் சிங்களவரால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து சிங்களவர் தலைவனுக்கும் வேறு 17 பேருக்கும் விக்கிரமசிங்கையாரியன் மரண தண்டனை விதித்ததாகவும் மேலும் பலரைச் சிறையில் அடைத்ததாகவும் யாழ்ப்பாணவைபவமாலை மூலம் அறியக் கிடைக்கின்றது. இதனால் பெருமளவு சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்தை விட்டு நீங்கினர். எனினும் விக்கிரமசிங்கையாரியன் இறக்கும் வரை அவனுக்குச் சிங்களவர்களால் தொல்லைகள் இருந்தே வந்தன.

விக்கிரம சிங்கையாரியனைத் தொடர்ந்து அவனது மகன், வரோதய சிங்கையாரியன யாழ்ப்பாண அரசனாக முடிசூட்டிக் கொண்டான்.

### வரோதய சிங்கையாரியன் (1302-1325)

வரோதயசிங்கையாரியன் யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச்சக்கரவர்த்திகள் வம்சத்தைச் சேர்ந்த ஒரு அரசனாவான். புத்திக் கூர்மை உடையவனாயிருந்த இவன் கி.பி 1302 ஆம் ஆண்டுக்கும் 1325 ஆம் ஆண்டுக்கும் இடையில் யாழ்ப்பாணத்தை ஆண்டிருக்கக் கூடும் எனக் கூறப்படுகின்றது. இவன் விக்கிரம சிங்கையாரியனின் மகனாவான். தனது தந்தையின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற இனக் கலவரங்களுக்கான அடிப்படைகளைக் கண்டறிந்து உரிய நடவடிக்கைகளை எடுத்ததன் மூலம் நாட்டில் அமைதியை இவன் நிலைநிறுத்தியதாக யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது. இவனைத் தொடர்ந்து இவனது மகன்மார்த்தாண்டசிங்கை யாரியன் அரசனானான்.

### மார்த்தாண்ட சிங்கையாரியன் (1325-1348)

யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்திகள் வம்சத்தைச் சேர்ந்தவனான மார்த்தாண்டசிங்கையாரியன் கி.பி 1325 முதல் 1348 வரையான காலப்பகுதியை அண்டி யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தான். இவன் முடி சூட்டிக்கொண்ட போது நாட்டில் அமைதி நிலவியது. எனினும் இடைக் காலத்தில் யாழ்ப்பாண அரசின் பெருநிலப் பகுதியின் பகுதிகளில் அதிகாரம் செலுத்தி வந்த வன்னியர் கலகம் செய்யலாயினர். இக் கலகங்களை மார்த்தாண்டன்0. இலகுவாக அடக்கினான்.

நாட்டில் கல்வி, வேளாண்மை ஆகியதுறைகளின் வளர்ச்சிக்காக நடவடிக்கைகளில் ஈடுபட்ட இவன் இரக்ககுணம் கொண்டவனாக விளங்கினான். இவன் சுகவீன முற்றுக் காலமான போது நாட்டின் எல்லாத் தரப்பு மக்களும் இவனது இழப்புக்காக வருந்தினர். இவனை அடுத்து இவன் மகன் குணபூஷண சிங்கையாரியன் அரசனானான்.

### குணபூஷண சிங்கையாரியன் (1348-1371)

குணபூஷண சிங்கையாரியன் யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் வம்ச அரசர்களுள் ஒருவன். இவன், நாட்டு மக்களின் பேரன்பைப் பெற்று விளங்கிய மார்த்தாண்ட சிங்கையாரியனின் மகனாவான். நாட்டைக் கல்வி மற்றும் தொழில் துறைகளில் வளர்ச்சியடையச் செய்ததன் மூலம், தனது தந்தையிலும் அதிகமாக, இவன் மக்களுடைய ஆதரவைப் பெற்றிருந்தான். உறுதியுடனும் நடுநிலைமையாகவும் ஆட்சி செலுத்திய இவன் முதிர்ந்த வயதுவரை ஆட்சியில் இருந்தான். முதுமையின் இயலாமை காரணமாக இறக்கும் முன்னரே ஆட்சிப் பொறுப்பைத் தனது மகனான வீரோதய சிங்கையாரியனிடம் ஒப்படைத்தான்.

### வீரோதயசிங்கையாரியன் (1371-1394)

வீரோதய சிங்கையாரியன் 14 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தை ஆண்ட அரசனாவான். இவன் ஆரியச் சக்கரவர்த்திகள் வம்சத்தைச் சேர்ந்தவன். இவனது ஆட்சிக் காலம் கி.பி 1371 முதல் 1394 வரையாகும் என செ.இராசநாயகமும், 1344 முதல் 1380 வரையாகும் என சுவாமிஞானப்பிரகாசரும் கருதுகின்றனர்.

இவன் காலத்தில் வன்னியர்கள் சிங்களவர்களைக் கலகம் செய்யுமாறு துாண்டிவிட்டனர். சிங்களவரை அடக்கிய வீரோதயன், வன்னியர் மீது படையெடுத்து அவர்களைத் தண்டித்தான்.

### பாண்டியனுக்கு உதவி

அக்காலத்தில் தமிழகத்தில், பாண்டி நாட்டை சந்திரசேகர பாண்டியன் என்பவன் ஆண்டு வந்ததாகவும், அப்போது அந்நாட்டை எதிரிகள் தாக்கி அதனைக் கைப்பற்றிக் கொள்ள, பாண்டியன் தப்பி யாழ்ப்பாணத்துக்கு வந்ததாகவும் யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகின்றது. வீரோதயசிங்கையாரியன் நாட்டை இழந்த பாண்டியனுக்கு ஆதரவாகப் படைதிரட்டிச் சென்று அவனுக்குப் பாண்டி நாட்டை மீட்டுக் கொடுத்ததாகவும் அந்நூல் கூறுகிறது.

மேற்கூறிய நிகழ்வு தொடர்பாகத் தமிழகத்திலிருந்து சான்றுகள் எதுவும் இல்லை. எனினும், 13 ஆம் நூற்றாண்டுக் கடைசியிலும், 14 ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலும், பாண்டி நாட்டை ஆண்ட முதலாம் மாறவர்மன் குலசேகரனின் மக்களான வீர பாண்டியன், சுந்தரபாண்டியன் இடையேயான பூசல்கள், இது தொடர்பில் மாலிக்கபூரின் பாண்டி நாட்டுப்படையெடுப்பு என்பவற்றுடன், வைபவமாலைக் கூற்றைத் தொடர்புபடுத்திய முதலியார் இராசநாயகம், சுந்தர பாண்டியனையே வைபவ மாலை சந்திரசேகர பாண்டியன் எனக் குறிப்பிட்டிருக்கக் கூடும் எனக்கருதுகிறார்.

வீரோதய சிங்கையாரியன் இளம் வயதிலேயே மரணமானான். சாப்பிட்டு விட்டுப் படுக்கைக்குச் சென்ற இவன் இரவில் படுக்கையிலேயே மரணமானான். இதனைத் தொடர்ந்து இவன் மகனான செய வீரசிங்கையாரியன் மிக இளம் வயதிலேயே அரசனாக முடி சூட்டிக் கொண்டான்.

### செயவீரசிங்கையாரியன் (1394-1417)

செயவீரசிங்கையாரியன் யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்திகள் வம்சத்தில் வந்த ஒரு அரசனாவான். இவனது தந்தையான வீரோதய சிங்கையாரியன் எதிர்பாராமல் மரணமானதைத் தொடர்ந்து இளம் வயதிலேயே முடி சூட்டிக் கொண்டவன் இவன்.

### கண்டியரசனுடன்போர்

செயவீரன், தன் காலத்தில் கண்டியை ஆண்ட புவனேகபாகு என்பவனுடன் போரிட்டு அவனை வென்றதாக யாழ்ப்பாண வைபவமாலை கூறும். பின்னர் பராக்கிரமபாகு என்பவன் பாண்டியன் முன்னிலையில் திறைதருவதாக ஒப்பந்தம் செய்து கொண்டு இழந்த நாட்டைப் பெற்று ஆட்சி செய்து வந்தான். இவனும் இவனுக்குப் பின் வந்தவர்களும் செயவீரன் காலம் வரையில் திறை செலுத்தி வந்தனர் என்பது வைபவமாலையின் கூற்று.

### செயவீரன்மரணம்

நீண்ட காலம் வெற்றிகரமாக ஆட்சி புரிந்த செயவீரன், கால மான பின் இவன் மகனான குணவீர சிங்கை யாரியன் ஆட்சிப் பொறுப் பை ஏற்றுக் கொண்டான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணவீக்கம்...

பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கடந்த ஓகஸ்ட் மாதத்தில் 2.1 சதவீதமாக இருந்த தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான பணவீக்கம் செப்ரெம்பர் மாதத்தில் 0.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. (ம-7)

## வெவ்வேறு...

பட்ட கட்டுநாயக்க விமான நிலையம் மினுவாங்கொட பிரதான வீதியின் ஆண்டியம்பலம் மத்திய மருந்தகத்திற்கு அருகில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

தபெம்முல்ல மற்றும் மகேவிட்ட பிரதேசத்தில் வசிக்கும் 19 மற்றும் 25 வயதுடையவர்களே உயிரிழந்துள்ளனர். சடலங்கள் நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை காலியில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ் ஒன்று வாத்துவ பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் 52 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும்தெஹியத்தகண்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து மரத்தில் மோதியதில் 56 வயதுடைய மோட்டார் சைக்கிள் செலுத்திய நபர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை அம்புலுவாவ, ஹெம்மாதகம பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் 75 வயதுடைய பெண்ணொருவரும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## அமைச்சர்களை...

குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அமைச்சரவை மாற்றமொன்று இடம்பெற்றது. இதனால் பிரச்சினைகள் தீருமா? இல்லை.

அமைச்சுக்களையும், அமைச்சர்களையும் மாற்றி பிரச்சினைகளை மூடி மறைக்க முற்படுகின்றனர்.

சுகாதார அமைச்சில் நிகழ்ந்த முறைகேடுகள், ஊழல்கள் குறித்தும் தரம் குறைந்த மருந்துகள் குறித்தும் முழு நாடுமே கதைத்தது. இந்த அமைச்சர் மாற்றத்தால் இது சரிக்கட்டப்படுமா? இது என்ன நகைப்புக்குரிய விடயம்.

சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தை முன்வைத்து விவாதம் நடக்கும்போது சுகாதார அமைச்சருக்கு பக்க பலத்தை காட்டும் முகமாக ஜனாதிபதி சபா பீடத்தில் இருந்தார். அன்று பாதுகாத்து இன்று மாற்றியுள்ளார்.

ஆனால் அவர் செய்த ஊழல் மோசடிகளை மூடி மறைக்க இடமளியோம்” என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## பலாலி விமான...

சுகாதார வசதிகளை அதிகரித்தல், குடிவரவு மற்றும் சுங்க அதிகாரிகளுக்கான வசதிகள் மற்றும் உள்கட்டமைப்புகளை அதிகரித்தல் உள்ளிட்ட பயணிகள் வசதிகள் விரிவுபடுத்தப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்காலத்தில்விமான சேவைகளை அதிகரிப்பதன் காரணமாக பலாலி விமான நிலையத்திற்கு வரும் மற்றும் புறப்படும் பயணிகளுக்கான வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்காக 200 மில்லியன் ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் இருந்து பலாலிக்கு தினமும் விமான சேவைகள் இடம்பெறுவதுடன், 60 பயணிகள் பயணிக்கும் வகையிலான விமானங்களே பலாலிக்கு இயக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இஸ்ரேல்...

ஹமாஸ் மற்றும் பலஸ்தீன ஜிகாத் அமைப்புகளின் பயிற்சி மையங்கள், சுரங்க பாதைகள், தலைமை இடங்கள் மற்றும் கண்காணிப்பு கோபுரங்கள் மீது இஸ்ரேல் கடுந்தாக்குதல்நடத்தியுள்ளது.

இந்நிலையில், காசா நகருக்குள் செல்லும் நிவாரண பொருட்கள் அடங்கிய வாகனங்களை இஸ்ரேல் படைகள் பரிசோதனை செய்து அனுப்பி வருகின்றன.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கும் இடையே போர் தீவிரமடைய கூடும் என்ற நிலையில், இலட்சக்கணக்கான இஸ்ரேல் மக்கள் புலம்பெயர்ந்து வருகின்றனர். (ம-7)

## பாராளுமன்றம்...

நெடுக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதை தொடர்ந்து பொதுத் தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டின் செப்ரெம்பர் அல்லது ஒக்ரோபர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

இதனை தொடர்ந்து, டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக பொதுத் தேர்தலை நடத்த முடியாத நிலை ஏற்படுமென்பதால், இந்த ஆண்டின் நிறைவுக்கு முன்னதாக குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, பொதுத் தேர்தல் தொடர்பான பேச்சுக்களை பொதுஜன பெரமுன ஆரம்பித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பாரத பிரதமர்...

மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு உட்பட அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பாரதப் பிரதமர் நரேந்திர மோடியை தமிழ் கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக சந்தித்து விடயங்களை தெளிவுபடுத்துவதற்கான நேரத்தை ஒதுக்குமாறு கோருவதற்கு இணக்கம் எட்டப்பட்ட நிலையில் அதற்கான உத்தியோகபூர்வமான கடிதத்தின் வரைவும் இறுதியாகியுள்ளது என சி.வி.விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

அதேபோன்று, உயிர் அச்சுறுத்தல் மற்றும் உளவியல் அழுத்தங்கள் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியாக கடமையாற்றிய சரவணராஜா வெளியேறிய விவகாரம் உட்பட சமகாலத்தில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கொழும்பில் உள்ள இராஜதந்திரிகளின் கவனத்திற்குகொண்டு செல்வதற்கான தனித்தனியான கடிதங்களும் இறுதியாகியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கையொப்பங்களை இடுவதற்கு கடந்த வாரம் நடைபெற்ற சந்திப்பின்போது தீர்மானிக்கப்பட்டதாகவும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் கூறியுள்ளார்.

அதற்கமைவாக குறித்த கடிதங்களில் கட்சித் தலைவர்கள் கையொப்பங்களை இட்டு அந்தப் பணி ஒரு சில நாட்களில் பூர்த்தியாகும் என எதிர்பார்ப்பதாக சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## சுகாதார...

நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் ரமேஷ் பத்திரனவிற்கு கைத்தொழில் அமைச்சுப் பதவிக்கு மேலதிகமாக சுகாதார அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை ரஞ்சித் சியம்பலாபிட்டியவிற்கு நிதி இராஜாங்க அமைச்சுக்கு மேலதிகமாக தோட்டத் தொழில் முயற்சிகள் அமைச்சரவை அல்லாத அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3518
சீட்டிழுப்பு திகதி 23.10.2023
U 20 32 40 70
U
20633

தன நிதானய
திகதி - 2023.10.23
சீட்டிழுப்பு இலக்கம் - 1306
X 14 20 31 49 X
07862

திகதி 23.10.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0102
L7 இலக்கம் 2 3
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
கடகம் 5 4 8 0 6 0

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.10.23
சீட்டிழுப்பு இலக்கம் 585
விருச்சிகம் 01 07 16 55 விருச்சிகம்

மெகா பவர்
திகதி 23/10/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1624
X 14 09 31 32 78
22530

மஹஜன சம்பத
திகதி 2023/10/23
சீட்டிழுப்பு இலக்கம் 5276
G 6 7 0 3 6 3

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2250 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.10.23 தினம் திங்கட்கிழமை
01 06 33 52 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,227,712.00

சனிதா
திகதி 2023.10.23 வெற்றி வாரம் 4411 வர்ணம் இளம் நீலம்
03 08 14 26 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61,553,912.00
72142

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3962 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.10.23 தினம் திங்கட்கிழமை
01 13 36 51
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,755,452/-
959019 983

திகதி 23.10.2023 வெற்றி வாரம் 1426 வர்ணம் பசுமை
Q 14 03 15 64 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 455,782,634.20
164979 245
தொலை பேசி 011-2 333 540-47
Web : www.dlb.lk

ஜயோதா Jayoda
திகதி 2023.10.23 வெற்றி வாரம் 1967 வர்ணம் செம்மஞ்சள்
10 39 50 60 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,064,972.00

அட கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2076
சீட்டிழுப்பு திகதி : 2023.10.23
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,830,616/-
28 35 44 49 B
386141

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**VILLAGE HOTEL**
**பஸ் சேவை**
**JAFFNA EXPRESS**
AIRPORT PICK UP DROP SERVICE



வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு
வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு
2800/=
(17484)
T.P: 077 544 8503


# ஆப்கானிஸ்தான் வெற்றி

பாகிஸ்தானை வீழ்த்தி ஆப்கானிஸ்தான் 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.



போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதற்கமைய, அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 07 விக்கெட்டுக்களை இழந்து 282 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

பந்துவீச்சில், ஆப்கானிஸ்தான் அணியின் நூர் ஹகமட் 49 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இந்நிலையில், 283 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 49 ஓவர்கள் நிறைவில் 02 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. (ம-7)

## அமைச்சரவை...

தனமான அதிகார அரசியலின் புதிய நாடகத்தை ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் அரங்கேற்றியுள்ளது.

அமைச்சரவையினுள் நடத்திய அபூர்வமான நபர்களிடையிலான மாற்றமே இந்த நாடகமாகும்.

இதற்கிணங்க எதிர்க்கட்சியும் நாட்டு மக்களும் தொடர்ந்து தோல்வியடைந்ததாக கூறிய சுகாதார அமைச்சரிடம் சுற்றாடல் அமைச்சை கையளித்துள்ளனர்.

உண்மையில் ஸ்மார்ட் நாட்டை உருவாக்குவதற்கு பதிலாக ஜிம்மாட் நாட்டை உருவாக்குவது தான் நடந்து வருகின்றது.

ஜனாதிபதி உருவாக்க முயற்சிக்கும் ஸ்மார்ட் நாட்டின் வடிவம் இதுதானா என்று நாம் கேள்வி எழுப்புகிறோம்.

மாற்றத்தை தன்னில் இருந்து ஆரம்பிப்பதாக கூறிய ஜனாதிபதி காண்பித்துள்ள வேடிக்கையான முன்னுதாரணம் புதுமையானதாகும். சுகாதார அமைச்சராக கெஹலிய ரம்புக் வெல்லவின் செயற்பாடுகள் தோல்வியடைந்ததால், நாங்கள் நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டு வந்தோடு, அரசாங்கம் ஒன்றிணைந்து அவரை பாதுகாத்தது. நாட்டின் சுகாதாரத்துறை வீழ்ச்சியடைந்தாலும், அவரை நம்பி அவரைப் பாதுகாத்தார் என்று சொன்ன அதே சுகாதார அமைச்சர் இன்று ஜனாதிபதியால் பதவி நீக்கம் செய்யப்பட்டு, 113 பேரின் நம்பிக்கையை நிர்வாண மாக்கியுள்ளார் என்றுள்ளது. (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17555)

076 825 7716 (ஆகாஸ்)



# கல்யாணமாலை

(இலவச திருமண சேவை)

**பதவி வெற்றிடம்**


**முகாமையாளர் (இருபாலாரும்)**

- வயதெல்லை – 40 இற்கு மேல்.
- அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- யாழ். நகரத்திற்கு அண்மையாக இருப்பவர்களுக்கு முன்னுரிமை

தொடர்புகளுக்கு

**076 097 3121**


# கண்ணீர் அஞ்சலி



(17563)


எனது அன்பு மைத்துனர்

அமரர் **சுப்பையா தர்மலிங்கம்**

21.10.2023 ஆம் திகதி அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைந்துள்ளோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல வண்ணை சிவபெருமான் பாதம் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.

தகவல்: சி.பாலசுந்தரம் குடும்பம், சகோதரர்கள்
077 078 5235

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 . 04 . 1972 | 19 . 10 . 2023 |

## குலவீரசிங்கம் குலராஜன் (றஞ்சன்)

சுதுமலையை பிறப்பிடமாகவும் வல்வெட்டியை வதிவிடமாகவும் கொண்ட குலவீரசிங்கம் குலராஜன்(றஞ்சன்) அவர்கள் 19.10.2023 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சுகிர்தாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற குலவிரசிங்கம் - பாக்கியலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும் மகாதேவன் - மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும் சிஜாந்தன், ஜதுரி அவர்களின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் வேவில், வல்வெட்டியில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 25.10.2023 (புதன்கிழமை) காலை 8.00 மணியளவில் தகனக்கிரியைக்காக ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

வேவில்,
வல்வெட்டி.
077 706 6408 (17558)

தகவல் :
குடும்பத்தினர்


**பணிப்பெண் தேவை**

மாலுசந்தி பத்தானையில் வசிக்கும் வயோதிப மாதுவை தங்கி இருந்து பராமரிக்க பெண் பணியாளர் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
(17559)
தொடர்புகளுக்கு
**077 062 4860**



**வாடகைக்கு**

ஸ்ரான்லி வீதி, 62/25, பழைய தபாற் கந்தோர் வீதியில் மூன்று மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு.
(C-7470)
**076 315 6470**



**அலுவலக வேலை - பயிற்சி**

2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு



*நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?
*இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி
*பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
(C-7484)
சம்பளம் - 60,000/- (2 மாதம்)
V2 TRAVELS - 0777-068-777



**அமெரிக்க அதிஸ்ட விசா** இன்னும் 10 நாட்களில் நிறைவடைகின்றன



2024 நீங்களும் அமெரிக்காவில்...
இன்னும் 10 நாட்களே உள்ளன.
0768226244
55000
V2 Travels
V2 TRAVELS



# காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 24 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு இரண்டு பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில்
- வீடு கட்டுவதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்.
- நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- யாழ் பஸ் நிலையம் 3 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/=)
- A-9 வீதியில் இருந்து 200 மீற்றர் தூரம்
- நன்னீர் ஊற்று.
- தரகர் தேவையில்லை

தொடர்பு
**077 623 4204**
**076 755 8606**
**077 076 0389**
(17565)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் ... அவர்களது அச்சகத்தில் 24.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org